Registered As Catholic Weekly

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 123 14—03—1997

இதழ்: 3,4 விலை 10

27 MAR 1997

## யூபிலி ஆண்டுப் பயணத்தில் அன்பிய குழுமவாழ்வு முக்கியம்

— யாழ் ஆயர் —

யாழ் மறைக் கோட்ட பங்குகளின் 50 பிரதிநிதிகள் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் ''பங்கேற்கும் திருச்சபை நோக்கி'' என்னும் தலைப்பில் மூன்று நாள் இரவு பகல் அன்பிய கருத்தரங்கில் பங்குபற்றினர்.

அக்கருத்தரங்கினை தொடக்கி வைத்து உரையாற்றிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ''யூபிலி ஆண்டு நோக்கிய பயணத்தில் அன்பிய குழும வாழ்வு முக்கியமானது. இதனை எமது பங்குகளில்

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# கிறிஸ்து உயிர்ப்பு விழாச் சிறப்பிதழ் - 1997

## ''நாங்கள் இளம் சுவாமிமாராய் வளர்த்தெடுத்த இடங்கள் இப்படி அழிந்து போய்ச்சே.''

— செடெக் இயக்குனர் — அருள்திரு. பி. தேவராஜா

யாழ் மனித முன்னேற்ற நிலையத்தின் தலைமைப்பீடமான ''செடக்'' நிறுவன இயக்குனர் அதிகார பூர்வ திடீர் விஜயம் ஒன்றை அண்மையில் யாழ் நகருக்கு மேற்கொண்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மன்னார் மறைமாவட்ட குருவும், முன்பு யாழ் மறைமாவட்டத்தில் பணி புரிந்தவருமான இவர்

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)



## ''இறைவன் தந்தார் அவரே எடுத்துக் கொண்டார்.''

அருள்திரு பி. இருதயதாஸ்

மறைந்த அருள்திரு ஜோண் லொறற்றின் ஓராண்டு நினைவு தினம் அவரின் குருத்துவ அர்ப்பண நாளான 23. 2. 97 இல் யாழ் மரியன்னை பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் நினைவு கூரப்பட்டது.

அருள்திரு லொறற்றின் உருவப் படத்திற்கு அவரின் தாயார் மலர் மாலை அணிவித்த பின் பங்குத்தந்தை அருள்திரு பி. இருதயதாஸ்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

## இடம் பெயர்ந்தோரையும், போரினால் பாதிக்கப் பட்டோரையும்... நாம் நினைக்கின்றோம்.

—1997 தவக்கால செய்தியில் திருத்தந்தை—

வத்திக்கான் நகரில் இருந்து திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் விடுத்த தன் தவக்காலச் செய்தியில் தங்குமிடமற்றவர்கள் பற்றிய தன் கவலையைத் தெரிவித்து ''என் தந்தையினால் ஆசிர்வதிக்கப்பட்டவர்களே வாருங்கள். ஏனென்றால் நான் அன்னியனாக இருந்தேன். நீங்கள் என்னை வரவேற்றீர்கள் (மத் 25: 34-35) என்ற வார்த்தைகளைச் சிந்திக்க அழைப்பு விடுக்கிறார்.

இன்று எத்தனையோ பேர் துர் அதிஸ்ட வசமாக வீடுகளில் இருந்தும், மனித அன்பின் நெருக்கத்திலிருந்தும் பெயர்த் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இடம் பெயர்ந்தோரையும், போரினால் பாதிக்கப் பட்டோரையும், இயற்கை அனர்த் தங்களால் அலைக் கழிக்கப் படுவோரையும் பொருளாதாரக் காரணங்களால் குடிபெயர்வோரையும் நினைக்கிறோம்.

தவக்காலம் இஸ்ராயேல் மக்களின் பாலைவனப் பயணத்தை ஞாபகப் படுத்துகின்றது. இக்காலத்தில் மக்கள் தற்காலிக கூடாரங்களில் எந்த நிரந்தரத்தன்மையும், பாதுகாப்பும் இன்றி வாழும் அனுபத்வைதப் பெற்றனர். அடிமைகளுக்குரிய உணவு அவர்களுக்குக் கிடைத்த போதும் எத்தனையோ தடவை அவர்கள் திரும்பி எகிப்திற்குப் போக நினைத்தார்கள். பாதுகாப்பற்ற பாலைவனவாழ்வில் இறைவன்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

## மகிமை பெற்ற மாதியாகம்

மகிமை பெற்ற மாதியாகம் மரணத்தை வென்றது.
உரிமையோடு வான் வீட்டைச் சுதந்தரித்துத் தந்தது.
பெருமையோடு கிறிஸ்தவத்தின் விழுமியங்கள் யாவையும்
அருமையான தத்துவமாய் அவனி எங்கும் சொன்னது.
கல்லறையும் மாதேவன் கட்டளையை ஏற்றது.
மெல்லத்திறந்தவரை வெளியே விட்டது.
பொல்லாங்கு செய்தவர்கள் பொறுப்பின்றித் தூங்கினார்-
பாவம்
இல்லாத தேவனவர் சிலுவையைத் தாங்கினார்.
விடுதலைப் பயணத்தை விருப்புடன் தொடங்கினார்.
படுகொலைக்கஞ்சாமல் பயணத்தைத் தொடர்கிறார்.
பாவத்திலிருந்தெம்மை விடுவிக்கும் பணியிலே
சாவையும் வென்றவர் சரித்திரம் படைக்கிறார்.
ஒப்புரவு பிறரன்பு இரக்கம் இவற்றுடன் - இதயத்
துப்புரவும் தியாகமும் அவசியம் என்கிறார்.
வான்வீட்டிலிருந்திங்கு இடம் பெயர்ந்து வந்தவர்
வையத்தின் இடப்பெயர்வால் வாய்விட்டு அழுகிறார்.
மீளக்குடியமர வானகம் செல்கிறார்.
ஆளும் பிதா அவரின் வலப்புறம் அமர்கிறார்.
'வாழப் பிறந்த தமிழ் மக்களே! உங்களை
மீளக்குடியமர்த்தி வாழ்விப்பேன்'' என்கிறார்.
'சூழும் துயர் வெல்ல சுதந்திரம் நாம் காண
வேணும் மாதியாகம் அது முடிவில் மகிமை பெறும்.

''நவாலியூர் நாயகி''

## புனித வளனார் திருவிழா மாற்றம்

கொழும்புத்துறை புனித வளனார் ஆலயத் திரு விழா 13-3-97 முதல் 16-3-97 ஞாயிறு திருநாள் திருப்பலியுடன் நிறைவு பெறும். வழமையான மார்ச் 19 ஆம் திகதி வளனார் திருவிழா புனித வாரத்திற்கு மிக அண்மையில் வருவதால் இம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று பாசையூர் பங்குத் தந்தை அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் தெரிவித்தார். பாசையூர் பங்கின் துணைப் பங்கான வளஞ்புர மேற்படி பங்கின் பரிபாலகராக அ.ம.தி குருமட அதிபர் அருட்திரு S. எட்லின் வசந்தராஜா பணி புரிகிறார். அருட்திரு சாள்ஸ் கொலின்ஸ் பாசையூர் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்ற பின் கொண்டாடப்படும் முதல் திருவிழா இதுவாகும்.

## ''இக்கட்டான இக்கால கட்டத்திலும் மறைக் கல்விப் பணி முக்கியமான ஒன்றாகும்''

—யாழ் ஆயர்

யாழ் மறைக்கல்வி நிலையத்தினால் வழங்கப்படும் மறை ஆசிரியர் பயிற்சி; இம்முறை ஒரு மாதகால குறுகிய பயிற்சியாக 17.2.97 அன்று மறைக்கல்வி நிலையத்தில் இயக்குனர் அருட்திரு R. H சகாயநாயகம் தலைமையில்

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

சாவின் கட்டுக்கள் நொருங்கட்டும்

சத்தியத்தின் ஒளி பரவட்டும்

வையத்து வாழ்வு வளம் பெறட்டும்

## ஈஸ்ரர் வாழ்த்துக்கள் - HAPPY EASTER

கிறிஸ்துவே முதலில் உயிர் பெற்றார்... அவரைச் சார்ந்தோர் உயிர் பெறுவர் (1 கொரி : 15 : 23)

# யாழ் திருச்சபை வரலாறு

## 5. நவீன யாழ் திருச்சபை

### 16ஆம் 17ஆம் நூற்றாண்டுகள்

(இதழ் 1 இன் தொடர்ச்சி)

அருள் திரு. இ. ஜெயசீலன்

இச்சந்தர்ப்பத்தில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கத்தோலிக்கர் 135 ஆண்டுகள் வேத கலாபனையின் ஊடாக, இன்று வரையும் இம்மண்ணில் நிலைத்து செழித்து நிற்பதற்கு ஒரு பெரும் சமூகவியல் காரணத்தையே சுட்டிக்காட்டுகிறார். இதை கலாநிதி சந்திரகாந்தன் அடிகளாரும் ஏற்று தனது நூலில் உற்புகுத்தியுள்ளார்.

"சாதிக்குழுமங்களாக மனந்திரும்பியதனால்தான் கத்தோலிக்கராக நிலைத்து நிற்கின்றனர்" என்பது இவர்களது கூற்று.

இது ஒரு அரைகுறை விளக்கமே தவிர பூரணமானதொன்றல்ல. ஏனெனில் சாதிகளைப் பொறுத்தமட்டில் கரையூர், பாசையூர், ஆனைக்கோட்டை மண்டைதீவு, மாதகல், எழுவைதீவு ஆகிய ஊர்களிலுள்ள கரையாம் மக்கள் மனந்திரும்ப ஏன் மயிலிட்டி, தொண்டைமன்னார், வல்வெட்டித்துறை முதலிய ஊர்களில் உள்ள கரையாம் மக்கள் சைவராக இருந்தனர்.

கொழும்புத்துறை, வல்வெட்டித்துறை முக்குவ மக்கள் சைவர்களாக இருக்க, ஏன் யாழ்நகர், அல்லைப்பிட்டி ஆகிய ஊர்களின் முக்குவ மக்கள், கத்தோலிக்கராக இருந்தனர், இருக்கின்றனர்? ஆயின் இந்த அரைகுறைச் சமூகவியல் காரணம், மன்னார்ப் பகுதி மக்களைப் பொறுத்த மட்டில் ஓரளவு பொருத்தமெனலாம்.

**மண்ணின் மதம்**

பாமர மக்களைக் கொண்ட திருச்சபைக்கு மனமாற்றம் பெற்று வந்த கத்தோலிக்கர் பற்றி வரலாற்று ஆசிரியர் பேர்ணியோலா குறிப்பிடும் பொழுது "பிரான்சீஸ்கன் துறவிகள் வெறும் திருமுழுக்குச் சடங்குகள் அற்புதமான மனமாற்றம் கொண்டுவரும் என்று நம்பினர். இதனால் திடீர் திடீர் திருமுழுக்குகளை ஊக்குவித்தனர்."

"திருமுழுக்கின் பின் மறை அறிவைப் புகட்ட முயற்சித்தனர். சிலர் மறை அறிவு இல்லாமலே வாழ்ந்தனர். மறை அறிவைப் பெற்றவர்கள் தாம் புதிதாக இணைந்து கொண்ட மறையில் பிரமாணிக்கமாக இருந்தனர் என்று கூறியவர் "போர்த்துக்கேயர் காலத்துக் கிறிஸ்தவ மனமாற்றத்துக்கான உண்மைக்காரணம் இன்னும் தெளிவாகக் கூறப்படவில்லை, திருப்தியாக ஆராயப்பட வில்லை. ஒல்லாந்தர் காலத்து வேதகலாபனையின் மத்தியில் தங்கள் உடைமைகள் பறிபோகும் நிலையிலும் தாம் நாடு கடத்தப்படும் ஆபத்தின் மத்தியிலும், எப்படி? ஏன்? தம் விசுவாசத்தில் நிலைத்து நின்றனர்" என வினாக்கள் எழுப்புகிறார்.

**நாம் கொடுக்கும் விளக்கம்:**

கத்தோலிக்கம் இம்மண்ணில் ஆழமாக வேரூன்றத்தொடங்கி ஒரு "தாந்தரிக" அம்சங்கள் நிறைந்த உயிர்க்கிறிஸ்தவத்தை தழைக்கப் பண்ணியது என்பதாகும்.

இதைப் போர்த்துக்கேய காலம் வித்திட்டு விதைக்க, யோசவ் வாஸ், கொன்சாலஸ் அடிகளார் காலம் அறுவடை செய்தது. இதனூடாவே அந்நிய நாட்டு மதமாகக் கருதப்பட்ட கத்தோலிக்கம், இம்மண்ணின் மக்கள் மதமாக, சுதேச மதமாக, மண்ணின் கலை பண்பாட்டு இலக்கிய வாழ்க்கை வடிவங்களைக் கொண்ட மதமாக மாறிற்று என்பது ஆழமாகச் சிந்திப்போருக்குப் புலனாகும்.

கத்தோலிக்க 'தாந்தரிகத்தின்' அம்சங்கள் எவை? அவை மக்கள் வாழ்வில் அகத்தாலும் புறத்தாலும் எங்கனம் இரண்டறக் கலந்தன? மக்கள் வாழ்வில் அவற்றின் தாக்கங்கள் எவை? என்பன பின்னர் விரிவாக ஆராயப்படும்.

**மூன்றாம் வகையினர்**

16ஆம் 17ஆம் நூற்றாண்டுகளின் ஈழத்தமிழ் கத்தோலிக்கருள் மிகமுக்கியமானவர்கள் இந்த 3ஆம் வகையினர் ஆவர். இரண்டாம் வகையினருள் எழுந்த புத்திஜீவிகளே இவர்கள். இவ்வகையினர் இயற்கை மேல் காட்டும் பற்றினையும், இயற்கைக்கு மேற்பட்ட இறையருள் வாழ்வினையும், ஒட்டுப்போட்டு இணைத்து வளர்ப்போராவர்.

இம்மண்ணின் மக்களான கத்தோலிக்க சுதேச இல்லற புத்திஜீவிகள் மனந்திரும்பிய புலவர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள் மெய்யியலாளர், சித்தர்கள், பக்தர்கள் ஞானிகள் அனைவரும் இம்மூன்றாம் வகைக்குள் அடங்குவர். இவர்கள் இம்மண்ணின் அடிநாதத்துடன் அது எழுப்புகிற வெளிவடிவங்களான குறியீடுகள், உணர்வுகள், தேவைகள், என்பவற்றை நன்கு அறிந்தவராவர்.

இவர்கள் யேசுசபையின் பயிற்சிக்கூடங்களில், பிரான்சீஸ்கன் பாடசாலைகளில் கல்விபயின்றோர், அல்லது பிரபல ஆசிரியரான என்றிக்கஸ் அடிகளாருடன் தொடர்பு கொண்டோர், தேநோபிலி (தத்துவ போதகர்) வீரமாமுனிவர் போன்றோருடன் தொடர்பு கொண்டோர் ஆவர்.

இவர்களில் சிலர் வேதியராகவும், ஏனையோர் கத்தோலிக்க இலக்கியப் படைப்பாளிகளாகவும், கலைஞர்களாக, நாடக ஆசிரியர்களாக, சிற்பிகள் ஓவியர்களாகவும், மூலிகை வைத்தியர்களாக, கட்டிடக்கலைஞர்களாகவும், நோய்களை மிக்கேல் சத்துரு சங்காரமாலை, செப்புத் தகட்டுயந்திரம் கொண்டு குணப்படுத்துபவர்களாகவும் தொண்டு புரிந்தனர்.

இவர்களது இச்செயற்பாடுகள் எல்லாம் மக்களின் சமூகத் தேவைக்கு ஏற்ப எழுந்த இல்லற கத்தோலிக்க பணிகளாகும். இவர்களாலேயே மிசனரிக்குருக்களால் சாதிக்க முடியாதிருந்த மண்மயமாக்கல் பண்பாட்டுமயமாக்கல் என்பவை அன்றே வெற்றிகரமாகச் செயற்படத் தொடங்கியது. ஒல்லாந்தர் காலத்து வேதகலாபனையின்போது குருக்கள் நாடு கடத்தப்பட்ட நிலையில் இவர்களது செயற்பாடுகளே கத்தோலிக்கம் அழியாது நிலைக்க உதவியது.

**நான்காம் வகையினர்**

இவர்கள் அதிகமாக 1620-ம் ஆண்டில் போர்த்துக்கேயர் முழுஆட்சிப் பொறுப்பினை ஏற்றபின் கிறிஸ்தவத்தில் சேர்ந்தவர்கள், யாழ்ப்பாணத்தின் செல்வம் செல்வாக்கு மிக்க குடும்பத்தவர்; அரச ஊழியர், நிலச்சுவாந்தர்கள், உலகீக புத்திஜீவிகள் ஆவர்.

இவர்கள் போர்த்துக்கேயரின் உத்தியோகங்கள் சலுகைகள், அதிகாரங்கள், பணவசதி பெறவே கிறிஸ்தவத்தில் சேர்ந்தனர். போர்த்துக்கேய பிரமுகர்கள், தளபதிகள், அதிகாரிகளின் குடும்பப்பெயர்களை இவர்கள் தமக்கும் தம் குடும்பத்தினருக்கும் சூடிக்கொண்டனர். அத்துடன் அவர்களைப் போலவே உடை உடுத்தி, உல்லாசமாக உலாவி வந்தனர்.

தங்கள் பிள்ளைகளை அவர்களின் பள்ளிக்கூடங்களில் சேர்த்துப் படிப்பித்தனர். பல்லக்குத்தூக்கும் பாட்டாளி வேலைக்காரர்களை அடக்கி ஆளும் அதிகாரிகளாகச் செயல்பட்டனர். வீதிகளில் வீறுநடை போட்டும் கோயில் திருநாட்களில் பூசைபிரார்த்தனைகளில் முண்டியடித்து முன்நின்று பங்கு கொண்டு வெளி வேடதாரிகளாக வாழ்ந்தனர்.

1656ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் ஆட்சி கிழக்கிந்திய கம்பெனியிடம் வீழ்ச்சியுற இவர்கள் ஒல்லாந்தருடன் ஒட்டிக்கொண்டனர். கூட்டுறவில் குளிர்காய்ந்தனர். உள்வீட்டில் சைவமும் வீதியில் வேதமும் என இரட்டை வேடம் பூண்டு வாழ்ந்தனர். இப்படி வாழ்ந்தவர்களும், இவர்களோடு ஒட்டி வாழ்ந்த ஒட்டுண்ணிகளும் வேத கலாபனையின்போது வேதத்தை மறுதலித்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.

எடுத்துக்காட்டாக போர்த்துக்கேய உயர்குலப் பெயர் பூண்ட டொன்யுவான் (DON JUAN) என்ற மாப்பாண முதலியார் நல்லூர் கோவிலைக் கட்டுவித்தவர்,

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)




குடும்பம் ஒரு கதம்பம் மீண்டுமா — மிக்க மகிழ்ச்சி என்றனர் சிலர். "அப்ப அறுவை இருக்கு எண்டு சொல்லுங்கோ" என்றான் ஒரு இளைஞன். "பழைய குடும்பம் ஒரு கதம்பம் எல்லாக் கட்டுரைகளையும் சேத்து வைச்சிருந்தனான். யாழ்ப்பாணத்தை விட்டு ஓடும்போது எல்லாத்தையும் இழந்துபோனேன். அது போல நல்ல கட்டுரைகளை எழுதுங்கோ..." என்றார் ஒரு அம்மா.

இதனை எழுதும் போது... பழைய நினைப்பு ஒன்று வருகிறது.

"குடும்பம் ஒரு கதம்பம் எண்டு எழுத வேண்டாம். குடும்பம் ஒரு கம்பம் எண்டு எழுதுங்கோ. என்ர குடும்பம் கம்பத்திலதான் இருக்கு..." என்றார் அல்லைப்பிட்டி நபர் ஒருவர்.

இந்தப் பகுதி மூலமாக ஒரு சில குடும்பங்களையாவது வழி நடத்த முன்பு செய்தது போல் ஒரு சில எழுத்தாளர்களையாவது உருவாக்க முடியுமென்றால் அது பெரிய சாதனையே. நிட்சயமாகப் பலர் பயன் பெறுவர்.

20.2.87 முதல் 8.6.90 வரை நீடித்த பழைய இத் தொடரில் 1. திருச்சபைச் சட்டத் தொகுப்பில் திருமணம் (18-11-88) என்னும் தொடர் கட்டுரையையும்
2. திருமண ஆயத்தப் பயிற்சி (12-5-89) என்னும் கட்டுரையையும்
3. உங்கள் கனவுகளை நனவாக்குங்கள் என்ற மொழி பெயர்ப்புத்தொடர் கட்டுரையையும் (20-10-89 — 8-6-90) சிறப்புக் கட்டுரைகளாக்கினோம். அத்தோடு பல புதிய எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தி, பலரின் கட்டுரைகளையும் பிரசுரித்தோம்.

பலரின் கட்டுரைகள் இப்போதும் வந்துள்ளன. ஆனால் பலரும் நாம் கேட்ட அனுபவங்களைப் பகிராமல் பொதுப்படக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். பொதுப்பட எழுதாமல் குறிப்பாக எழுதுங்கள்.

வந்த கட்டுரைகளின் இரண்டின் பகுதிகளை மட்டும் இம்முறை பிரசுரிக்கிறோம்.

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை

### இன்றைய குடும்பங்கள்

இன்றைய கால கட்டத்தில் சீரான உணவின்மை இடம்பெயர்வு, அகாலமரணங்கள் வறுமை, பொருளாதாரச் சிக்கல்கள் இவைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் பல குடும்பங்கள் தத்தளிக்கின்றன. குடும்பத்தலைவர்களில் சிலர், ஏன் குடும்பத்தலைவிகள்கூட இளைஞர்கள் யுவதிகள் கூட தற்கொலையே தம் சிக்கல்களுக்குத் தீர்வென அணைத்துக் கொள்கின்றனர்.

குடும்ப நிலைமைகளைச் சமாளிக்க, வயது வந்த பெண் மக்களுக்கும் திருமணம் செய்யவெனப் பணம் சேர்க்க சில தாய்மாரே வயது வந்த பிள்ளைகளைத் தனியே விட்டு வெளிநாடு போகிறார்கள். காணும் பலன் அப்பப்பா சொல்லவே முடியாது.

பெற்றோர் பிள்ளைகளை வெளிநாடு அனுப்ப அவர்களைத் திருமணம் செய்வதாக வாக்குப் பண்ணி கடைசியில் அவர்களைநிர்க்கதிக்குள்ளாக்கிவிட்டு தலைமறைவாகிறார்கள் பல இளைஞர்கள்.

பெற்றோர்களை முதியோர் இல்லங்களிலும் சேர்த்து விடுவோரும் உளர். இது தகுமா? அன்புடன் தாலாட்டிச் சீராட்டி வளர்த்துவிட நீங்களே அவர்களைப் பிரியச் செய்வது அன்பில்லாத்தன்மை அல்லவா? தனிமை, பிரிவு, வேதனைகள் வருத்தங்களால் அவர்கள் கஷ்டப்படும் போது உங்கள் மனம் இரங்காதா?

ஆஞ்சலின் தரிசிக்கா

### அன்பின் குடும்பங்கள்

நம் கிறிஸ்தவத்தின் அடித்தளம் அன்பு. அதன் மூலவேர் அன்பு. அதே போன்று. நம் கிறீஸ்தவ குடும்பங்களின் அச்சாணியும், அடித்தளமும் அன்புதான், இந்த அன்பு என்றுமே, எவராலுமே அழிக்கப்படாத, அழிக்கமுடியாத அன்பாகத் திகழ வேண்டும், துலங்க வேண்டும்.

தாய் தந்தையரிடம் கபடமற்ற அன்பு சுயநலமற்ற அன்பு நிறைய வேண்டும். செயல்பட வேண்டும். அந்த அன்பினால் அந்தக் குடும்பத்தின் அன்புச் செல்வங்களான குழந்தைகள் யேசு பாலனின் சிறப்பம்சங்கள் கொண்டவர்களாக தெய்வீகச் சுடர்களாகப் பிரகாசிப்பார்கள். உன்னத பரிசுத்தமான வாழ்வு வாழ்ந்து கிறீஸ்துவின் நற்சாட்சிகளாகத் திகழ்வார்கள். இப்படியே குடும்பங்கள் வாழ்வோமாயின் சண்டை இல்லை, சச்சரவு இல்லை. கோபங்கள், வன்மங்கள் இருக்கவே இருக்காது. ஏழ்மை இருந்தால் கூட அது பகிரப்பட்டு இன்ப உணர்வே பரிமளிக்கும். இது சாத்தியப்படாத ஒன்றல்ல. உண்மையிலும் உண்மை, வாழ்ந்து பார்ப்போம், வாழ்ந்து காட்டுவோம்.

பிள்ளைகளும் பெற்றோரும் அன்பில் ஈர்க்கப்பட்டு அன்புள்ளம் கொண்டவர்களாக, இறையன்புமிக்கவர்களாக இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டு செபத்தில் நிலைத்து. வழிபாடுகளில் பங்குகொண்டு, அமைதி, அடக்கம், பேரானந்தம் உள்ளவர்களாக வளர்வார்கள். பாடசாலையிலும், பங்குகளிலும் பரிமளிப்பார்கள். மணம் பரப்பும் நறுமலர்களாகத் திகழ்வார்கள்.

மாகிறேற் ஸ்ரெவ்னி

# புனித வார வழிபாடுகள்

## முன்னுரை

திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டில் தவக்காலமே மிகவும் முக்கியமானதாகும். மனிதன் இறைவனைத் தேட வேண்டிய வேளையிலே அந்த இறைவனே மனிதனைச் சந்திக்க வரும் புனிதமான காலம் தான் இது. ஒவ்வொருவரின் உள்ளக் கதவைத் திறக்கும் படி இறைவன் சுட்டி நிற்கும் காலமிது. பரிசுத்த வாரமானது கிறீஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றை நினைவூட்டும் உன்னத வாரமாக உள்ளது. பரிசுத்த வாரத்தின் சிறப்பான நாட்களாக பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி என்பன திரிதினங்களாக விளங்குகின்றன. இந் நிகழ்வுகள் உணரப்படாமல், அர்த்தம் கொடுக்கப்படாமல் ஒரு வெறும் வழிபாடாக அல்லாமல் உயிரூட்டம் பெற்ற ஒரு நிகழ்வாக மாறவேண்டும்.



## குருத்து ஞாயிறு

''உன்னதங்களில் ஓசான்னா'' என்று முழங்கி ஆர்ப்பரித்து ஆண்டவரை எதிர் கொண்டனரே.

யேசு கழுதைக்குட்டியின் மேல் ஏறி பாஸ்க்கா மறைபொருளை நிறைவேற்ற வெற்றி வீரனாக ஜெருசலேமுக்கு வருகை தந்தார். இந்த மகிமை பொருந்திய வருகையை நினைவு கூருமுகமாக இன்று திருச்சபையில் குருத்தோலைகளைத்தாங்கிய மக்களின் வருகைப் பவனி இடம் பெறுகின்றது.

குரு சிவப்பு நிற உடை அணிந்து பவனி இடம்பெறும் இடத்தில் வழிபாடுகளை ஆரம்பிப்பார். குருத்தோலைகளை ஆசீர்வதித்து யேசுவின் மகிமை பொருந்திய ஜெருசலேம் வருகை பற்றிய நிகழ்வை நற்செய்தி ஏட்டிலிருந்து வாசிப்பார்.

பின் குரு ஆலயத்தினுள் சபை மன்றாட்டுடன் திருப்பலியைத்தொடருவார்.

1) முதலாம் வாசகம்

இசை 50 : 4-7

1. யேசு துன்புறுத்துவோரிடம் கையளிக்கப்படுவதையும் அவர்களின் முன் யேசு துணிவுடன் செயல்படுவதையும் கூறுன்றது.

2) இரண்டாம் வாசகம்.

பிலிப். 2:6-11

யேசுக்கிறீஸ்து கடவுள் தன்மையில் விளங்கினாலும் தன்னை வெறுமையாக்கி அடிமையின் தன்மை பூண்டு, மனித உருவில் தோன்றி தம்மைத் தாழ்த்தி சாவுக்குத் தன்னைக் கையளித்தார்.

இன்று திருப்பாடுகளின் வரலாறு தூபம், வாழ்த்துரை இன்றி சிலுவை அடையாளம் வரையாமல் வாசிக்கப்படும். அத்துடன் யேசு உயிர் பிரியும் சம்பவம் வாசித்த பின் அனைவரும் முழந்தாவிட்டு சிறிது நேரம் மௌனமாயிருப்பர்.

3) திருப்பாடுகளின் வரலாறு

யேசுவின் பாஸ்க்கா உணவு தொடக்கம் பாஸ்க்கா ஞாயிறு வரை இடம்பெற்ற நிகழ்வுகளை எடுத்துக்கூறுகின்றது.

## பெரிய வியாழன்



இன்று திருப்பலி மாலை வேளையில் முதன்முறையாக நடைபெறுவது போல் ஆலயம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு ஒப்புக்கொடுக்கப்படும். மகிழ்ச்சியின் நாளாகிய இன்று குரு பொன்னிற ஆடை அணிந்திருப்பார். இன்று குருத்துவம் நற்கருணை என்பவற்றை யேசு ஏற்படுத்தியதோடு அன்பின் கட்டளையையும் எமக்குக் கொடுக்கின்றார். இன்று உன்னதங்களிலே கீதம் இசைக்கப்பட்டு மணிகளனைத்தும் ஒலிக்கப்பட்டு மகிழ்ச்சியின் அறிகுறி அறிவிக்கப்படும். ஆனால் உன்னதங்களிலே கீதமும், மணிகளும் மீண்டும் உயிர்ப்பு விழாவன்றே ஒலிக்கப்படும். இன்று விசுவாசப் பிரமாணம் சொல்லப்படுவது இல்லை . வெள்ளிக்கிழமைக்குரிய நற்கருணை இன்று அர்ச்சிக்கப்பட்டு வைக்கப்படும்.

இன்று நோயாளர்களின் எண்ணெய், ஆயத்தக்காரரின் எண்ணெய், கிறிஸ்மா எண்ணெய் என்பன ஆயரால் மந்திரிக்கப்படும்போது அனைத்து குருக்களும் இணைந்து சடங்கை நிறைவேற்றி தம் குருத்துவ வாக்குறுதிகளைப்புதுப்பிப்பது ஆயருக்கும் குருக்களிற்கும் இடையேயுள்ள ஒன்றிப்பையும், ஒரே உறவையும் பிரதிபலிக்கின்றது. ஆனால் யாழ். திருச்சபையில் பரிசுத்தவாரத்தில் வரும் திங்களன்றே இச்சடங்கு நிறைவேற்றப்படுகின்றது.

இன்றைய இப்பெருவிழா இறைவாக்கு வழிபாடு, பாதம் கழுவும் சடங்கு, நற்கருணைப் பவனி ஆகிய நான்கு பெரும் பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

### இறைவாக்கு வழிபாடு

முதல் வாசகம் யாத் :

12:1-8, 11-14

இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரின் பாஸ்க்காவை கொண்டாடும் விதிமுறைகள் பற்றியும் அவர்கள் தலைமுறை தலைமுறையாக கொண்டாடப் பணிக்கப்படுவதும் கூறப்படுகின்றது.

இரண்டாம் வாசகம்

கொரி: 11:23—26

அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகும் போதெல்லாம் ஆண்டவரின் மரணத்தை அறிக்கையிடுகின்றோம்.

சங்கீதம் : 115

திருக்கிண்ணத்தை ஏந்தி நாம் இறைபுகழ் கூறுவது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதலன்றோ.

நற்செய்தி வாசகம்

அரு. 13:1–15

இயேசு தன் சீடர்களின் பாதங்களைக் கழுவி '' நான் உங்களுக்கு மாதிரி காட்டினேன். நான் செய்தது போல் நீங்களும் செய்யுங்கள்'' என்று அன்புக்கட்டளை கொடுக்கிறார்.

பாதம் கழுவும் சடங்கு

யூத மரபில் அடிமைகள் தம் தலைவர்களின் பாதங்களைக் கழுவினார்கள். ஆனால் யேசு தன் சீடர்களுடைய பாதங்களைக் கழுவி ''ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் பாதங்களைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் ஒருவருடைய பாதங்களைக் கழுவவேண்டும் என்று அன்பின் கட்டளையை கொடுக்கின்றார்.

நற்கருணை விருந்து

கிறிஸ்து நற்கருணையை ஏற்படுத்திய தினமாகிய இன்று வழமைபோல் நற்கருணை விருந்து இடம் பெறும்.

நற்கருணைப் பவனி

நற்கருணையை குருவானவர் பவனியாக எடுத்துச் சென்று ஏற்கனவே தயார் செய்யப்பட்ட புதிய இடத்தில் வைப்பார். பீடம் வெறுமையாக்கப்பட்டு நற்கருணைப் பேழை அகலத் திறந்துவிடப்பட்டிருக்கும். கிறிஸ்து தம்மையே நமக்காக வெறுமையாக்கினார் என்பதை இது குறிக்கிறது. நற்கருணைப்பவனியும், பீட இடமாற்றமும் இயேசு மரண தீர்ப்பையும், நமக்காக இரத்த வியர்வை சிந்தியதையும், மறியலில் வைக்கப்பட்டதையும் குறிக்கும்.

## பெரிய வெள்ளி



''தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமுமில்லை'' (அரு:15:13) என்று கூறிய இறைமகன், விண்ணிற்கும் மண்ணிற்கும் இடையில் மூன்று ஆணிகளில் மும்மணி நேரம் தொங்கி இறந்ததை நினைவு கூருகின்ற நாள் பெரியவெள்ளிக்கிழமை ஆகும். திரிகள், பீடச்சீலை, சோடினைகள் அனைத்தும் அகற்றப்பட்டு பீடம் வெறுமையாக இருக்க முன்னுரை, பாடல்கள் ''பிதா சுதன்......'' எதுவும் இன்றி இன்றைய பெரிய வெள்ளி வழிபாடுகள் இடம் பெறும். குரு சிவப்பு நிற ஆடை அணிந்து தரையில் முகங்குப்புற விழுந்து சிறிது நேரம் செபிப்பார். இந்த சிவப்பு நிற ஆடையானது இறைமகன் இயேசு பாவத்தில் வீழ்ந்திருந்த மக்களை இரத்தம் சிந்தி மீட்பார் என்பதையும், முகங் குப்புற விழுந்து செபித்தல் இறைமகன் இயேசு விண்ணில் இருந்து மண்ணிற்கு வந்து மக்களை மீட்பார் என்பதையும் குறித்து நிற்கிறது.

இன்றைய வழிபாடானது இறைவார்த்தை வழிபாடு, விசுவாசிகள் மன்றாட்டு, திருச்சிலுவை முத்தி, திருவிருந்து என நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

### இறைவார்த்தை வழிபாடு

முதலாம் வாசகம்:-

இசையாஸ் 52: 13 — 53: 12

நம் பாவங்களுக்காக இறைமகன் யேசு எவ்வாறு வேதனைப்படப் போகின்றார் என்பதை இறைவாக்கினர் இசையாஸ் முன் கூட்டி எடுத்துரைக்கின்றார்.

இரண்டாம் வாசகம்:- எபிரேயர் 4:14-16, 5:7-9

கீழ்ப்படிதலைத் துய்த்துணர்ந்தார், தமக்கு கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் முடிவில்லா மீட்பின் காரணமானார் என்பதை எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தின் ஊடாக புனித சின்னப்பர் எடுத்துரைக்கின்றார்.

நற்செய்தி வாசகம்:-

அருளப்பர் 18:1—19:42

வாழ்த்துரை, சிலுவை அடையாளம் எதுவும் இன்றி புனித அருளப்பர் நற்செய்தியில் இருந்து திருப்பாடுகளின் வரலாற்றை மூவர் வாசிப்பார்கள்.

### விசுவாசிகள் மன்றாட்டு

இன்றைய நாள் விசுவாசிகள் மன்றாட்டுக்கள்: திருச்சபைக்காக, தலைமை ஆயருக்காக, திருச்சபையில் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்காக, ஞானஸ்ஞானம் பெற ஆயத்தம் செய்வோருக்காக கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக, யூதர்களுக்காக, கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவர்களுக்காக, கடவுளை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்காக, நாடுகளை ஆள்வோருக்காக, துன்புறுவோருக்காக செபிப்பதாக அமையும்.

### திருச்சிலுவை முத்தி:

துகிலால் மூடப்பட்ட திருச்சிலுவையை குருவானவர் தூக்கி, 'திருச்சிலுவை மரம் இதோ! இதிலே தான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்,' என்றுபாட இறைமக்கள், 'வருவீர் ஆராதிப்போம்' என பதில் கூறுவர். இவ்வாறு மூன்று முறை குருவானவர் இப்பாடலைப்பாடுவார். ஒவ்வொரு முறையும் பாடிய பின் குரு சிறிது சிறிதாகக் துகிலை கழற்றுவார். தொடர்ந்து வழிபாடு நடத்தும் குருவும் குருமரபினரும், பீடப்பரிசாரகர்களும், இறைமக்களும் பவனி வந்து திருச்சிலுவையை முத்தி செய்வார்கள். இவ் வேளையில் ஆராதனைக்குரிய பொருத்தமான பாடல்கள் பாடப்படும்.

### திருவிருந்து

பீடத்தின் மீது பீடத்துகில் விரிக்கப்பட்டு பின் பரலோக மந்திரத்தில் ஆரம்பமாகி நற்கருணை வழங்கப்படும். நன்றி வழிபாட்டுடன் 'பிதா, சுதன் ......' இன்றி வழிபாடு நிறைவடையும்.

## புனித சனி

இருள் மறைந்தது. ஒளி பிறந்தது. துயரக்கண்ணீர் ஆனந்தக்கண்ணீரானது. பட்ட மரம் பச்சை மரமானது. விலக்கப்பட்ட கல் மூலைக்கல்லானது. இயேசுவின் உயிர்ப்பு மரணத்தின் இறப்பானது. கிறிஸ்தவர்கள் என்ற சகாப்தத்தின் பிறப்பானது.

இன்றைய வழிபாடு, ஒளி வழிபாடு, இறைவாக்கு வழிபாடு, திருமுழுக்கு வழிபாடு, நற்கருணை வழிபாடு என நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

### ஒளி வழிபாடு

ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் கொண்ட ஒளி, கல்லில் இருந்து உண்டாக்கப்பட்ட ஒளி இன்று கல்லறை இயேசுவிற்கு சான்று பகர்கிறது.

விளக்குகள் அணைக்கப்பட்டிருக்க ஒளி மந்திரிக்கப்பட்டு புதுத்தீயில் இருந்து பாஸ்குத்திரி பற்ற வைக்கப் படுகிறது. பாஸ்குத்திரி உயிர்த்த கிறிஸ்துவைக் குறிக்கிறது.

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து மீட்கப்பட்ட மக்களுக்கு மேகத்தூண் வழி காட்டியது போல பாவ இருளில் இருந்து மீட்கப்பட்ட நம்மை புது வழி காட்டி ஆலயத்திற்கு அழைத்துச் செல்கிறது பாஸ்குத் திரி.

இப்பாஸ்குத் திரியில் கிறிஸ்து சிலுவை மரணத்தால் வெற்றிவீரராக்கப்பட்டார் என்பதைக்காட்ட திருச்சிலுவையும், அவரின் 5 திருக்காயங்களைக் குறிக்க 5 சாம்பிராணி மணிகளும், ஆதியும் அந்தமும் இல்லாதவர் என்பதைக்காட்ட 'அல்பா' 'ஓமேக்கா' என்ற கிரேக்க எழுத்துக்களும், கிறிஸ்து இன்றும் நம்மோடு வாழ்கிறார் என்பதைக் காட்ட சிலுவையைச் சுற்றி நடப்பாண்டும் குறிக்கப்படுகிறது.

குரு சிலுவையின் நேர் கோட்டை வரையும்போது கிறிஸ்து நேற்றும் இன்றும்' – குறுக்குக் கோட்டை வரையும் போது 'முதலும் முடிவும்'– அல்பா ஓமேக்கா என்ற எழுத்துக்களை எழுதும் போது '' அல்பாவும் ஓமேக்காவும் – என்றும் கூறுவார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

---

எமது கல்லூரியில் எமக்குத் தரப்பட்ட புனித வார விளக்கங்களை மக்கள் நலன் கருதி இங்கே தொகுத்துத் தருகிறோம்.

அருட்சகோதரர்கள் மதி, தயாகரன், எழில், நிருபன், மரியதாஸ், லெஸ்லி, ஸ்ரீபன்,

## புனித வார...

1997 என்று நடப்பாண்டை எழுதும் போது முறையே 'காலங்கள் அவருடையன' 'யுகங்கள் அவருடையன'' ''மாட்சியும் ஆட்சியும் அவருக்கே என்றென்றும் எக்காலமுமே ஆமென்'' என்று சொல்லுவார்.

5 சாம்பிராணி மணிகளை சிலுவையின் மேல் குத்தும் போது முறையே 1. தம்முடைய பரிசுத்த 2. மகிமையான காயங்களால் 3. ஆண்டவராகிய கிறிஸ்து 4. நம்மைக் கண்காணித்து 5. காப்பாராக ஆமென் என்று செபிப்பார்.

பின் ''கிறிஸ்துவின் ஒளி இதோ'' என்று குரு பாஸ்காத்திரியை உயர்த்தி வைத்துக் கொண்டு மூன்று முறை பாட எல்லோரும் ''இறைவா உமக்கே நன்றி'' என்று பாடிக்கொண்டு எரியும் திரிகளுடன் குருவைத் தொடர்ந்து ஆலயத்தில் நுழைவர். பீடத்தை அடைந்ததும் இவ்வரவின் மகிமையைக்குறிக்கின்ற பாஸ்கா புகழுரை பாடப்படும்.

### இறைவாக்கு வழிபாடு

இன்றைய நாளின் மிக முக்கிய பகுதி இதுவாகும். பழைய ஏற்பாட்டில் 7 வாசகம், புதிய ஏற்பாட்டில் (திருமுகம், நற்செய்தி) 2 வாசகம் என 9 வாசகங்கள் வாசிக்கப்படும். தேவை ஏற்படும் இடத்து பழைய ஏற்பாடு 3, புதிய ஏற்பாடு 2 என 5 வாசகங்கள் வாசிக்கலாம். செங்கடலைக் கடத்தல் இன்றைய பாஸ்கா தினத்தில் முக்கியம் என்ற படியால் யாத்திராகமம் 14 : 15- 15 : 1 என்ற வாசகம் மிக முக்கியமானது.

முதல் வாசகம் :- (ஆதி 1 : 1 – 2 : 2 அல்லது 1 : 1, 26-31)
மீட்பின் தொடக்கம் படைப்பு வெறுமையில் இருந்து முழுமையை இருளில் இருந்து ஒளியை மண்ணில் இருந்து மனிதனைப் படைக்கிறார்.

இரண்டாம் வாசகம் :- (ஆதி 22: 1 – 18 அல்லது 22 : 1-2, 9-13, 15- 18)
ஈசாக்கை பலியாக்கும்படி இறைவன் கேட்கிறார். சோதனையின் நடுவே பெரும் சாதனை புரிந்து விசுவாசத்தின் தந்தையாகிறார் ஆபிரகாம்.

மூன்றாம் வாசகம்:-
(யாத் 14 : 15 - 15 : 1)
இது இன்றைய தினத்தின் முக்கியமான வாசகம். செங்கடலைக் கடந்த வரலாறும் மேகமும், நெருப்புத்தூணும் வழி காட்ட முன்னேறி விடுதலை அடைந்த வரலாறு வாசிக்கப் படுகிறது.

நான்காம் வாசகம்:-
(இசை 54 : 5 - 14)
புதிய ஜெருசலேம்.

ஐந்தாம் வாசகம்:-
(இசை 55 : 1 - 11)
அனைவருக்கும் மீட்பு அருளப் படுகிறது.

ஆறாம் வாசகம்:-
(பாரூக் 3: 9-15, 32-4 : 4)
ஞானத்தின் ஊற்று.

ஏழாம் வாசகம்:-
எசே (36:16-17, 18- 28)
புதிய உள்ளம் புதிய மனப்பாங்கு

திருமுகம் : (உரோ 6! 3 - 11)
நாம் கிறிஸ்தவர்கள் என்பதால் கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பில் உரிமையுடன் பங்கு கொள்கிறோம்.

நற்செய்தி வாசகம்:-
(மாற் 16 : 1 - 8)
உயிர்த்தவரை இனி இறந்தோரிடையே தேடவேண்டாம். இறந்த கிறிஸ்து உயிர்த்துவிட்டார்.

### திருமுழுக்கு வழிபாடு

புதிய நீர் மந்திரிக்கப்படுகிறது. எரியும் பாஸ்க்காத்திரியை நீர்த் தொட்டியின் உள்ளே வைத்து குருவானவர் ஞானஸ்நானத்தால் கிறீஸ்துவுக்குள் அடக்கம் பண்ணப்பட்ட அனைவரும் அவரோடு வாழ்விற்கு உயிர்த்தெழ வேண்டுமென்று செபிப்பார்.

பசாசையும் அதன் செயல்களையும் அதன் ஆரவாரங்களையும் விட்டு விடுவதால் எரியும் திரிகளை கைகளில் பிடித்துக் கொண்டு எல்லோரும் திருமுழுக்கு வாக்குறுதிகளைப் புதுப்பிப்பர்.

### உயிர்ப்பு ஞாயிறு



கிறீஸ்து உயிர்த்தெழவில்லை என்றாலோ உங்கள் விசுவாசம் வீணானதே. எங்கள் தூதுரைப் பணியும் வீணானதே (1 கொரிந்தியர் 15:17)

இயேசுவைக்குறிக்கும் பாஸ்காத்திரியானது இன்றில் இருந்து பாஸ்கா காலம் முழுவதும் பற்றவைக்கப்படும். இது உயிர்த்த கிறீஸ்து நம்மோடு வாழ்கின்றார் என்று குறித்து நிற்கிறது.

தவக்காலத்தில் பாடப்படாத அல்லேலூயாக் கீதம் இன்று முதல் பாடப்படும்.

முதல் வாசகம் (அ. பணி 10:34, 37—43)
இராயப்பர் தனது அருளுரையில் கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை. நன்மை செய்த கிறீஸ்துவை கழுமரத்தில் ஏற்றிக் கொன்றுபோட்டனர். ஆனால் கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிர்ப்பித்தார்.

இரண்டாம் வாசகம் (கொலோசேயர் 3:1–4)
உயிர்த்த கிறீஸ்து புது வாழ்வுக்கு ஊற்று. இவ்வுலகில் உள்ளவற்றின் மீது மனதைச் செலுத்தாமல் மேல் உலகில் உள்ளவற்றின் மீதே மனதைச் செலுத்துங்கள்.

நற்செய்தி (அருளப்பர் 20:1-9)
இங்கு மதலேன் மரியாள் இராயப்பரிடமும் இயேசுவினால் நேசிக்கப் பட்டவராகிய மற்ற சீடரிடமும் இயேசு உயிர்த்தெழுந்தார் என அறிவிக்கின்றாள். அவர்கள் இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழவேண்டும் என்னும் மறைநூல் வாக்கை விசுவசித்தார்கள்.

### முடிவுரை

இப்புனித வார நிகழ்வுகள் வெறுமனே தியானிக்கப்பட வேண்டியவை அல்ல; வாழப்பட வேண்டியவை. எவ்வாறு கிறிஸ்துவின் பாடுகள் மரணம் என்பன உயிர்ப்பு என்னும் மகிமைக்கு வாயில்களாக அமைந்தனவோ அவ்வாறே எமது வாழ்வின் நாளாந்த துன்ப அனுபவங்களும் எம்மை மகிமைக்கு இட்டுச் செல்லும் வழிகளாக வேண்டும். துன்பத்திலிருந்து விலகி ஓடுவதற்கல்ல. மாறாக அந்த துன்பங்களுக்கு முகம்கொடுத்து துணிவுடன் வாழவேண்டும் என்றே இந்த பாஸ்கா மறைநிகழ்ச்சிகள் எமக்கு அழைப்புவிடுத்து நிற்கிறது. இந்த வகையில் இன்று எம்மக்கள் அனுபவிக்கும் துன்ப நிகழ்வுகளும் நாளைய விடுதலைக்கும், சமாதானத்திற்கும், பாதுகாப்பிற்கும் கட்டியம் கூறிநிற்பதாகவே கருதப்பட வேண்டும். இவ்வாறு எம் வாழ்க்கை நிகழ்வுகளின் பின்னணியில் இப்புனித வார நிகழ்வுகளை சிந்தித்து பயன் பெறுவோமாக.



1. ப. யேசுரட்ணம், வயது 52
மாதா கோவில், கோப்பாய்

"இந்தக் கருத்தரங்கு பொது நிலையினரான எம்மை அப்போஸ்தலிக்கப் பணிக்கு அழைக்கும் ஒரு நிகழ்வாக உள்ளது'

2. திருமதி யூலியற் யேசுதாசன், வயது 44
யாழ். புனித யுவானியார் ஆலயம்

பகிரும் பண்புகள் குறைந்த எமது சமூகத்தில் அப்பண்பை வளர்க்க இவ்வாறான கருத்தரங்குகள் உதவிசெய்கின்றன. ஒரு தாயாகிய எனக்கு எனது குடும்பம் பற்றிய எந்த கவலையும் ஏற்படா வண்ணம் இக்கருத்தரங்கு ஓர் உயிரோட்டம் உள்ளதாக அமைந்தது.

3. N. ஜெனாவா, வயது 28
புனித அன்னம்மாள் ஆலயம், பாண்டியன்தாழ்வு

''இந்த கருத்தரங்கு, திருச்சபைக்குள்ளே குடும்ப உணர்வை உணரக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இங்கு எமக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள் தலைவர்களாக உருவாக்குவதற்கல்ல, மாறாக ஊக்குவிப்பாளர்களாக சமூகத்தில் செயற்பட எம்மை ஆயத்தம் செய்துள்ளது.

4. திருமதி யூயின் யூலியற், வயது 40
புனித யாகப்பர் ஆலயம், குருநகர்

நாங்கள் எதிர்பார்த்ததைவிட முற்றுமுழுதாக மாறுபட்ட ஆழமான சிந்தனைகளை எமக்கு விட்டுச் சென்ற கருத்தரங்காக இது அமைந்துள்ளது. கருத்தரங்கு நடைபெற்ற விதம் திருநிலையினர் தங்களது நிலையை உணர்ந்து பொது நிலையினரிடையே தம்மைப் பகிர்வது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

5. T. I. றங்கநாயகம், வயது 25
யாழ். ஆசனக்கோவில்

"குருக்கள் பொதுநிலையினரிடையே உள்ள புரிந்துணர்வை ஆழமாக்குவதாக இந் நிகழ்வு அமைந்துள்ளது. பொது நிலையின் விளக்கமுள்ள நிலையில் திருச்சபையின் பணிகளில் தம்மைத் துணிவுடன் ஈடுபடுத்திக்கொள்ள இந்நிகழ்வு எம்மைத் தூண்டியுள்ளது. இங்கு சிறப்பு அம்சம் என்னவென்றால் பணி பொதுநிலையினரால் தாமாகவிளங்கி எடுக்கப்பட்டமையாகும். மேலும் இங்கு இடம்பெற்ற வேதாகம பகிர்வு அனுபவம் உணர்சிமிக்கதாக இருந்தது. நிச்சயமாக இந்த வேதாகம பகிர்வின் மூலம் நாம் திருச்சபையை முன்னேற்றலாம்.

6. S.யேசுதாஸ்
செபமாலைமாதா கோவில், கொழும்புத்துறை

''வார்த்தை கேட்கப்படுவதுடன் மட்டும் நில்லாது, வாழப்படுவதன் மூலம்தான் புதிய பங்கேற்கும் திருச்சபையை நாம் கட்டி யழுப்ப முடியும்.

## இந்தக் கல்லூரி பழைய நிலைக்கு வரும் — கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியை மீள ஆரம்பிக்கும் வைபவம் 3. 3. 97 அன்று திருப்பலியுடன் ஆரம்பமானது. ஊர்காவற்துறை பங்குத் தந்தை அருட்திரு அன்ரனி பாலாவும், இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரி உப அதிபராகவும், பின் பதில் அதிபராகவும் கடமையாற்றி தற்போது ஆயரினால் இடம் மாற்றப்பட்டு அந்தோனியார் கல்லூரிக்கு ஆசிரியராக நியமனம் பெற்றுள்ள அருள் திரு எ. இயேசுதாசும் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுத்தனர். தீவுப் பகுதி இடம் பெயர்வின் பின் யாழ் சென் ஜோண்ஸ் அக்கடமியிலும் பின் தீவுப்பகுதி திறந்து விடப்பட்டபின் கரம்பொன் பாலர் பாடசாலையிலும் இயங்கி வந்த மேற்படி கல்லூரி தற்போது மீண்டும் ஊர்காவற்துறையில் பழைய இடத்தில் இயங்க ஆரம்பிப்பது குறிப்பிடத் தக்கதாகும். மேற்படி வைபவத்தின் போது யாழ் வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா 98 மார்ச் மாதத்திற்கு முன்பாக இந்தக் கல்லூரி பழைய நிலைக்கு வரும். பாடசாலை அபிவிருத்தியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். சகலரும் தியாக மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்' என்றார். ஜேர்மன் உதவித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட இருக்கும் 6 பாடசாலைகளில் புனித அந்தோனியார் கல்லூரியும் ஒன்றாகும். காட்லிக்கல்லூரி, பாஷையூர் சென் ஜேம்ஸ், கனகரத்தினம் மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்பன மற்றைய பாடசாலைகளாகும்.

## 50 ஆண்டுகள் நிறைவு

தென் இந்திய திருச்சபையும், யாழ்ப்பாண அத்தியட்சாதீனமும் 50வது ஆண்டு நிறைவை இவ்வாண்டு கொண்டாடுகின்றன. தென் இந்திய திருச்சபை 1947 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27 ஆம் திகதி சென்னை புனித ஜோர்ச் தேவாலயத்தில் தொடங்கப்பட்டது. தென் இந்திய திருச்சபையில் 21 மறை மாவட்டங்கள் உள்ளன. யாழ் அத்தியட்சாதீனம் பேராயர் கலாநிதி எவ். ஜெபநேசனின் தலைமையில் உள்ளது.

## யூபிலி ஆண்டு...

நாம் ஊக்குவிக்க வேண்டும். மிக ஆர்வத்துடன் இதனை அறிய வந்திருக்கும் உங்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக உள்ளது'' என்றார்.

Asian Integrated Pastoral Approach (ASIPA) என்ற அன்பியக் குழுவினால் யாழ் மறைக் கோட்ட பங்குகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்ட இக் கருத்தரங்கில் யாழ் பேராலயம்-9, புனித அடைக்கல அன்னை பங்கு (O.L.R) 4, புனித யாகப்பர் பங்கு 7, நாவாந்துறை பங்கு 2, பாசையூர் பங்கு 6, பண்டியன்தாழ்வு பங்கு 4, திருநெல்வேலி பங்கு 3, ஆசீர்வாதப்பர் பங்கு 4, யூவானியார் பங்கு 2, அரியாலைப் பங்கு 2 புனித சவேரியார் குருத்துவக்கல்லூரிச் சகோதரர்கள் 7 என 50 பேர் பங்கு பற்றினர்.

அருள்திரு ப. இருதயதாஸ், அருள்திரு ப. இயேசுரட்ணம், அருள்திரு. M. றவிச்சந்திரன், அருள்திரு அன்ரனிபாலா, அருள்திரு சாள்ஸ்கொலின்ஸ், ஆகிய குருக்கள் நடத்திய இக் கருத்தரங்கு பற்றி ''பாதுகாவலன்'' நிருபர் சேகரித்த கருத்துக்களையும் தருகின்றோம்.

# 75 ஆம் ஆண்டு நிறைவு விழாக் காணும்

1997 மாசி இலங்கையின் அப்போஸ் த லி க் க கார்மேல் சபையினருக்கு ஒரு பொன் னான நாள். க ட ந் த 75 வரு ட ங் க ள ா க இலங்கை யின் பல்வேறு துறைகளிலே பணியாற்றி இறையரசைப்ப ரப்பி திருச்சபையின் வளர்ச்சிக் காகசேவையாற்றக் கிடைத்த இணையில்லா ஆசீர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறும் நாள். 1922 ல் கிழக்கு மாகா ணத்தின் இயற்கைத் துறைமுக மான வனப்புமிகு திருமலை யில் காலடி எடுத்துவைத்த நான்கு அப்பேஸ்தலிக்க கார் மேல் அருட்சகோதரிகள் இன்று முப்பத்துமூன்று மடங்களில் இலங்கையில் பல மாவட்டங் களில் கிளைகள் பரப்பி ஏறக் குறைய 250 அருட்சகோதரி களைக்கொண்டதாக வளர்ச்சி அடைந்துள்ளது.

அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த சோபியா எனும் ஆங் கிலப் பெண் கத்தோலிக்க திரு மறையினை தழுவி இறைவ னின் குரலுக்கு செவிமடுத்து கார்மேல் சபையில் தன் வாழ் வினை அர்ப்பணித்து அருட் சகோதரி வெரோணிக்கம்மாள் எனும் பெயரைப் பெற்றுக் கொண்டார். இந்தியாவில் ஆங்கிலக் கல்வியினை கற்றுக் கொடுக்க கத்தோலிக்கர் இல் லாத பெருங்குறையினை க ண் ணு ற் ற ஆ ய ர் மாறிஎப்றம் ஆ ண் ட கை யின் வேண்டுகோவின் பெயரில் அருட்சகோதரி வெரோணிக்கா கார்மேல் சபையை விட்டு விலகி, பல்வேறு கஸ்டங்கள் சவால்களை வெற்றிகண்டு பிரான்ஸ் நாட்டில் பெயோன் எனும் நகரில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக்கு வித்திட் டார்.

துறவற வாழ்வின் ஆரம்ப பயிற்சியினை பெ ற் று க் கொண்ட அருட்சகோதரிகள் இந்தியாவில் தம் கல்விப்பணி யினை ஆரம்பித்தார்கள். மங் களூரில் காலடி எடுத்து வைத் தவர்கள் பல மடங்களை ஸ்தா பித்து பல இடங்களில் கல் லூரி, மற்றும் சமூகநலப்பணி களிலும் தம் சேவையினை ஆற்றினார்கள்.

1922ல் திருமலை-மட்டுநகர் ஆயராக இருந்த இயேசு சபை ஆயரான மேதகு றெபேஷெ ஆண்டகையின் வேண்டுகோள் பேரில் மங்களூர் அப்போஸ்த லிக்க கார்மேல் சபையின் தலை வியான அருட்சகோதரி அல்வீ சியா அவர்கள் நான்கு அருட் சகோதரிகளை இலங்கைக்கு அனுப்பிவைத்தார். திருமலை யில் மாசித்திங்கள் 5ம் திகதி காலடி எடுத்து வைத்த அருட் சகோதரிகளான மாறிலூட்ஸ் லொறன்சியா, கிளேயா, யுஸ் ரீனா போன்றோர் புனித சூசையப்பர் மடத்தில் இருந்த குளுணி அருட்சகோதரிகளி னால் வரவேற்கப்பட்டார்கள். புனித மரியாள் தமிழ் ஆங்கில பாடசாலைகளில் தம் கல்விப் பணியினை ஆரம்பித்த இவர் கள் புனித சூசையப்பர் மடத் தில் அனாதை இல்லத்திலும் சேவையாற்றினர்.

வைகாசித்திங்கள் மட்டுநகரி லும் தம் சேவையினை ஆரம் பித்த இவர்கள் படிப்படியாக இலங்கையின் பல்வேறு மாவட் டங்களிலும் தம் சேவையினை பரப்பினர். "இறைவனே தம் வாழ்வின் நிறைவு" எனும் அருங்கொடைக்கிணங்கசெபம் அப்போஸ்தலிக்க வாழ்வின் மூலம் இயேசுவின் சாட்சிகளாக அவரது ஒளியை வெளிப்படுத்தி

னின் அரசையும், அவரது அன் பினையும் பரப்புவோம் என் பது எம் நம்பிக்கை.

கடந்த 75 ஆண்டுகளில் அப் போஸ்தலிக்க கார்மேல் சபை யினர் தம் சேவையினை ஆற்ற இறைவன் அளித்த அழைப் பிற்காகவும், எண்ணற்ற ஆசீர் களுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இந் நன்னாளில் எம்மை அழைத்து எம் வளர்ச்சிக்காக உ த வி செய்த பலரையும் நாம் நன்றி யுடன் நினைவு கூருகின்றோம். இலங்கைத் தீவிற்கு எம்மை வரவழைத்த அன்றைய திரு மலை-மட்டுநகர் ஆயர் மேதகு றொபேஷெ ஆண்டகை, (யேசு சபை) ஏனைய அருட்தந்தை யர்கள், உபகாரிகள் அனைவ ரையும் பேரன்புடன் நினைவு கூருகின்றோம். இலங்கை மக் களுக்கு சேவை செய்ய தம் தாயகம் விட்டுவந்து தியாகம் பல புரிந்த, புரிந்து வரும் எம் இந்திய நாட்டு அருட்சகோத ரிகளை நன்றியுள்ள அன்புள் ளத்துடன் நினைவு கூர்கின் றோம்.

அவர்களது அ ப் போ ஸ் தலிக்க ஆர்வமும், கிறிஸ்து வின் மேல் இருந்த விசுவாசம், தன்னலமற்ற தியாக சேவை யும், இன்று எம் சபை வளர்ச்சி யடைய அடிப்படைக் காரண மாக அமைந்தது என்பதனை



விழாவினைக் காணும் பாக்கி யம் பெற்றுக் கொண்ட தலை விகளான அருட்சகோதரிகள் காமலீற்றா, மரியல்லா, வின்சன் அவர்களை இறைபுகழ்ச்சியில், நன்றியில் விசேடமாக நினைவு கூருகின்றோம். இலங்கையின் மாகாணத் தலை வி க ளா க

டத்தில் எம்பணி சிறக்களமக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் நல்கி வரும் எமது ஆயர் ஆதி வண. கிங்சிலி சுவாம்பிள்ளை அவர் களையும், குருக்களையும், துற விகளையும் விசேடமாக நன்றி யுடன் நினைவுகூருகின்றோம்.

மாசித்திங்கள் 5ம் திகதி திரு

# அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

வருகிறார்கள். கல்விப் பணி மூலமும், அப்போஸ்தலிக்க சேவை மூலமும் இறையன் பினை வெளிப்படுத்தும் இவர் கள் பாலர் பாடசாலைகள், கல்லூரிகள், பெண்கள் இல்லங் கள், முதியோர் இல்லங்கள், மறைக்கல்வி, பங்குத்தளங்க ளில் பல்வேறு பட்ட பணிகள் மூலம் தம் சேவையினை ஆற்றி வருகிறார்கள்.

இந்தியா இலங்கை மட்டு மன்றி பாகிஸ்தான், குவைத், கென்யா, உரோமாபுரி போன்ற நாடுகளிலும் இன, மத, மொழி வேறுபாடின்றி கல்விப்பணியி னையும், சமூகசேவையினையும் ஆற்றி வருவதுடன் மேலும் பல நாடுகளிலும் பல்வேறு பட்ட துறைகளிலும் எம் சேவையினை ஆற்றி இறைவ

எம்மால் மறுக்க முடியாது. அவர்களது முன்மாதிரியான சாட்சி பகர் வாழ்க்கை பல இளம் உள்ளங்களை மட்டு மல்ல யாவரையும் கவர்ந்தது.

அருட்சகோதரி. எம். பவளராணி ஞானப்பிரகாசம். அ. கா திருமலை.

பல்வேறு மறைமாவட்டங் களில் பணிபுரியும் எம் அருட் சகோதரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வரும் ஆயர்கள், குருக் கள், உபகாரிகளையும் நினைவு கூர்ந்து நன்றி கூறுகின்றோம். எம் ஆன்மீக வாழ்விலும், அப் போஸ்தலிக்க ப ணி யி லு ம் பெரும் அக்கறை எடுத்து எம் முழு வளர்ச்சியில் அன்புடன் பணியாற்றும் எம் சபைத்தலை விகளை விசேடமாக வைர

இருந்த எம் அருட்சகோதரி கள் எம் ஆன்மீக வாழ்விலும் அப்போஸ்தலிக்க வாழ்விலும் பெரும் அக்கறை எடுத்து எம் வளர்ச்சிக்கு பெரும் பணி யாற்றி உள்ளார்கள். அவர் களில் விசேடமாக அருட்சகோ தரிகள் மோட், இன்சென்சியா ஐனிசியா, சிந்தியா, டிலெக்ரா ஆகியோரை ந ன் றி யு ட ன் நினைவு கூருகின்றோம். திரு மலை-மட்டுநகர் மறைமாவட்

மலை புனித மரியாள் பேரா லயத்தில்நடைபெற்றஇந்நன்றி திருப்பலிக் கொண்டாட்டங் களில் இலங்கையின் பல்வேறு மறைமாவட்ட ஆயர்கள், குருக்கள், துறவிகள், எம்சபைத் த லை வி அருட்சகோதரி M. வின்சன், மாகாணத்தலைவி அருட்சகோதரி M. டிலெக்ரா, நாட்டின் பல்வேறு பகுதிகளி லுமிருந்து வரும் எம் அருட் சகோதரிகள் பங்குபற்றி இறை வனுக்கு நன்றி கூறினார்கள்.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரின்
விருது வாக்கு
"இறைவனே எம் வாழ்வின் நிறைவு"
God Alone Sufficeth

# அகிலத்தில் அறப்பணி புரியும் அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர்

அப்போஸ்தலிக்க கார்மேற் சபைக் கன்னியர்களாகிய நாம் கார்மேல் என்னும் விருட்சத் தின் ஓர் கிளையாகி இலங்கை மண்ணிற் காலடி வைத்த 75ம் ஆண்டு நிறைவினையும் யாழ் மண்ணிற் பாதம் பதித்த 50 வருடங்களையும் நினைவு கூரும் இவ்வேளையில் எமது கடந்தகாலப் பணிவாழ்வில் இ றை வ னி ன் அன்புக்கரம் எ ம் மை ம வழிநடத்தியதைச் சிறப்பாக நினைத்து அக மகிழ்ந்து அக்களிக்கின்றோம்.

### பாதையின் திருப்பம்

எமது சபையின் ஸ்தாபக ராகிய எம் அன்னை வரோ ணிக்கா இங்கிலாந்தில் அங் கிலிக்கன் மதகுருவின் முதற் கனியான சோபிலீக்ஸ் என்ப வர் தன் அன்புத்தங்கையா கிய மேரிஆனுடன் இணைந்து கத்தோலிக்க மதத்தைத் தழு வி ய து ட ன் சோபிலீவ்ஸ் தன்னை முழுமையாக இறை வனுக்கு அர்ப்பணிக்க புனித வளனார் சபையிற் சேர்ந்தார். அங்கிருந்து வேதபோதக நாடு களுக்கான தம் பயணத்தை ஆரம்பித்த எம் அ ன் னை பாரத மண்ணிற்கு வந்தது மட்டுமன்றி எமது நாட்டிலும் காலிப் பிரதேசத்தில் கால் பதித்ததையிட்டு பெருமை அடைகின்றோம்.

மேன்மை தங்கிய ஆயர் மாறி எவ்றம் என்பவர் கார் மேல் அர்ப்பண வாழ்வின் மேன்மையை அன்னை வரோ ணிக்காவுக்கு எடுத்துக் கூறி யதுடன் இந்திய மண்ணில் இளம் பெண்களைக் கல்வியி லும் முழுமனித வளர்ச்சியி லும் இட்டுச் செல்வதற்கு அத்திவாரம் இடும்படி கூறி னார். அத்துடன் கார்மே லின் தியானமும் அப்போஸ் தலிக்க பணியும் இரண்டறக் கலந்து மிளிர ஒருசபை வேண் டியிருந்தது. எனவே இதை நிறைவேற்றப் பல்வேறுபட்ட துன்பதுயரங்கள், இன்னல் இடையூறுகளின் மத்தியிற் கார்

★ அருட்சகோதரி மரியமலர் யோசவ் (அ. கா)

மேற் சபையிற் சேர்ந்த எம் அன்னை அவ்வாழ்வை மிக வும் விரும்பினார். இறைவ னின் இன்ப சந்நிதியில் இறை புகழ்பாடி வாழ்வதே இனிது என்று ஏற்றுக் கொண்டார். இருப்பினும் இன்னோர் திருப் பம் பிரான்ஸ் தேசத்திற் பயோண் என்னும் இடத்தில் வேத போதக நாடுகளுக்கான அப்போஸ்தலிக்க கார்மேற் சபையை ஆயரின் வேண்டு கோளைப் பணிவுடன் ஏற்கு முகமாக 1868ம் ஆண்டு யூலைத் திங்கள் 16ம் நாள் மலரவைத்தார்.

### பாரதத்தில் நம் பணிகள்

பிரான்ஸ் தேசத்தில் பயோண் என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நம் சபை 1870ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 19 ம் நாள் மங்களூரில் புனித அன்னம்மாள் மடத் தில் மூன்று கன்னியர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது.

கல்விச் செல்வத்தை அளிப்பதையே தமது முக்கிய நோக்காகக் கொண்டு தமது பணியை ஆரம்பித்த இவர்கள் இந்திய மண்ணிற் பல பாகங்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# அகிலத்தில் அறப்பணி புரியும் அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர் (5ஆம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் பாடசாலைகளையும் கல்விக் கல்லூரிகளையும் நிறுவி மாணவர்களுக்குக் கல்வி அறிவை ஊட்டுவதில் மட்டுமன்றி மழலைச் செல்வங்களின் ஆன்மீக வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களுக்கு அமைய இறைவழியில் அவர்களை அழைத்துச் சென்றனர்.

மூன்று கன்னியர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது சபை இன்று பாரதத்தின் பல பாகங்களிலும் கிளைகளைப் பரப்பிப் பல தரப்பட்ட பணிகளைப் புரிந்து இறைவனின் பகிரங்க சாட்சியாய் மிளிர்கின்றது. குறிப்பாகப் பாக்கிஸ்தான், குவைத், ஆபிரிக்கா, றோம் போன்ற பல்வேறு இடங்களிலும் எமது பணி பகிரப்பட்டு சிறப்புற நிகழ்கின்றது.

## இலங்கைத் தீவில் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை

இறைவனின் திட்டத்தை இகத்தினில் நிறைவேற்றத் தனது கருவியாகத் தேர்ந்தெடுத்த ஆயர் றொபிஷோவின் அழைப்புக்கு இணங்கவே திருமலை மண்ணில் 1922ம் ஆண்டு மாசித்திங்கள் 5ம் நாள் எம் சபை மலர்ந்தது.

அங்கிருந்து கிழக்கு இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கும் மலைநாட்டுப் பிரதேசத்திற்கும், கொழும்பு மாநகரத்திற்கும் தமது சேவைகளைப் பகிர முயன்று நின்ற சகோதரிகள் தாம் சென்ற இடங்களிலெல்லாம் பாடசாலைகளையும் விடுதி இல்லங்களையும் அநாதை இல்லங்களையும் நிறுவித் தமது குறிக்கோளுக்கிணங்க இறைஅனுபவத்தை யாவருடனும் பகிர்ந்து இறைவனின் இராட்சியத்தை எங்கும் பரப்பி நின்றனர்.

## யாழ் மண்ணில் எம் சபையினர்

பதுளை நகரில் அப்போஸ்தலிக்க கார்மேற் சபைக் கன்னியர்களினால் நடாத்தப்பட்ட கண்காட்சியிலே மறைந்த ஆயர் எமிலியானுஸ் பிள்ளை அவர்களைச் சந்தித்ததன் விளைவே எம் சபை யாழ் மண்ணில் வேரூன்ற வித்திட்டது என்றால் அது மிகையாகாது. அத்துடன் அறப்பணி செய்து அருள் மறைத் துறவியாகி, ஆயராய் மிளிர்ந்து நின்ற மறைந்த இயோமர் ஆண்டகையின் அழைப்பாலும் மறைந்த அருட்தந்தை G. T. பாலசுந்தரம் அடிகளாரின் அயராத முயற்சியினாலும் 1947 ம் ஆண்டு மார்கழித் திங்கள் 29 ம் நாள் எமது இலங்கை நாயகியின் புனித மடம் அச்சுநகர் மண்ணில் மலர்ந்தது.

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற அமுத மொழிக் கிணங்க அச்சுநகர் மண்ணிலே அவதரித்து அளப்பரிய சேவைகளினால் அனைவரது இதயங்களிலும் இடம் பிடித்துவிட்டு எமது மதிப்பிற்குரிய சேர் சிற்றம்பலம் ஏபிரகாம் காடினர் அவர்கள் எமது மழலைச் செல்வங்கள் கல்வியிலே சிறந்தோங்கி நல்லதோர் சமுதாயம் உருவாக்கப்படவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் எமது புனித திரேசாள் பாடசாலையையும் அப்பாடசாலை பொலிவுறத் திகழ அருகிலே அருட்சகோதரிகளுக்கென அவர்கள் உறைவதற்கு வேண்டிய கன்னியர் மடத்திற்கான காணியையும் வழங்கினார். பணி செய்து கிடப்பதே எனது கடன் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் அரும்பணியாற்றி மறைந்து சென்ற அருட்சகோதரி கிளேய அவர்கள் இலங்கை மண்ணில் முதன் முதலில் அடியெடுத்து வைத்த மறைத் தூதுவர் [Missionary] மட்டுமன்றி அச்சுவேலி மடத்தின் முதல்வராகவும் திகழ்ந்தார், அச்சுநகர் மண்ணிலே அமைந்த எமது புனித தெரேசாள் பாடசாலையே அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்கள் பலர் அர்ப்பணப் பூக்களாக மலர வழிகோலியது என்பது யாவரும் அறிந்த உண்மை.

இவ்விதமாக யாழ்மண்ணில் புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையுடனும், கார்மேல் கன்னியர் மடத்துடனும் பணி செய்ய எம்மை அழைத்தது மட்டுமன்றி, கரவெட்டி மண்ணிலும் அச்சுநகர் கார்மேல் அன்பகத்திலும், யாழ் நகரில் புனித லூர்து மடம், தாளையடியிற் கார்மேல் அலைஅகம் எனப் பல கிளைகளைப்பரப்பி எமது சபை பெரியதோர் விருட்சமாக வளர்ந்துள்ளது.

யாழ் மண் மக்கள் கடந்த ஒரு தசாப்தமாக போர் அனர்த்தங்களினால் அனுபவித்த சொல்லொணாத் துன்ப துயரங்கள், பசி, தாகம், மனக்குழப்பங்கள், மனக்கலக்கங்கள், உறவு முறிவுகள் எதிர்பாராத இழப்புக்கள் மத்தியிலும் அப்போஸ்தலிக்க கார்மேற் கன்னியர்கள் நிலைகுலையாது யாழ் மண்ணிலேயே நிலைத்திருந்து போர்மேகங்கள் சூழ்ந்த பயங்கரச் சூழ்நிலையில் மக்கள் நடுவே கலங்கரை விளக்குகள் போற் திகழ்ந்து தம்மாலான அனைத்து ஆன்மீக மறைப்பணிகளை மட்டுமன்றி மக்கள்பணியும் மறைப்பணியே என்று புணி செய்வதில் இறைவனைக் கண்டார்கள். இதனால் இவர்களின் அன்பும் இரக்கமும் நிறைந்த பணியினால் மக்கள் மனஆறுதலையும் மனநிறைவையும் பெற்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது. உயிருக்கு உத்தரவாதமில்லாத காலப் பகுதியிலே உறங்குவதற்கு இடமில்லாது நம் மக்கள் அலைந்து திரிந்த வேளையில் தமது பாடசாலைகளை உவந்தளித்து உண்மை அன்பைக் காட்டி நின்ற பெருமை எம் சபையைச் சாரும்.

## எம் பணிகள்

முழுமையான முழுநிறைவு பெற்ற கல்வியைப் பற்பல விதத்திற் பல்வேறு வழிகளினூடாக வழங்க விசேட கல்வித்திட்டம், இளம் மங்கையர்க்கு மகத்தான தையற் கல்வி, முறைசாராக் கல்வி, மழலைச் செல்வங்களுக்கு முன்பள்ளிகள், அவர்கள் வதிவதற்கென விடுதிகள், உளநோயாற் பாதிக்கப்பட்டவர்களை அன்புடன் அரவணைத்து வழிகாட்டுதல், எவராலும் கைவிடப்பட்டுக் கவனிப்பார் அற்று அன்பிற்காகத் தவிக்கும் வயோதிபர்களுக்கு வயோதிப இல்லங்கள் போன்ற இன்னோரன்ன பணிகளை எமது சபை நிறைவேற்றி வருகின்றது. மேலும் பங்குத்தளங்களிலே மறை அறிவை ஊட்டுதல், வழிபாடுகளைச் சிறப்பித்தல் போன்ற நற்பணிகளையும் எமது சபை ஆற்றி வருகின்றது. இத்தகைய மகத்தான பணிகளுக்கு நடுவே எமது குழுவாழ்விலே செபித்தலும், எமது மாதிரியான செப வாழ்வினால், எம் அன்புச் சகோதரர்களைச் செபிக்கத் தூண்டுவதுமே எமது மேலான பணியாகத் திகழ்கின்றது.

காலங்கள் மாறுபட்டுக் கோலங்கள் வேறுபட்டு அறிவுப்பேரொளி விரிந்து அறிவுக் கடலில் மூழ்கி 21ம் நூற்றாண்டை அண்மித்த இவ்வேளையில் இறையரசுக்கு, இணையில்லாத் தொண்டு செய்வதற்கும், இறைமகன் இயேசுவின் உன்னத சாட்சிகளாய் மிளிர்ந்திடவும், பணி வாழ்விலே இறை அனுபவத்தைப் பெற்று மகிழும் எம் சபையினர் சமுதாயத்திலே எதிர்கொள்ளும் வேதனை, சோதனைகள், துன்ப துயரங்கள், குறுக்கீடுகள், சவால்களின் மத்தியிலும் அனைத்து நெருக்கடிகளுக்கும் துணிவுடன் முகம் கொடுத்து எமது அர்ப்பண வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க முயல்வோமாக,

## நன்றி

—இலங்கை மண்ணில் இறை ஊழியத்தில் எம் பணி சிறந்த 75 ஆண்டுகள்.

யாழ் மண்ணிற் தேவை அறிந்து சேவை தெரிந்து அழைக்கப் பட்டோம் 50 ஆண்டுகள்.

இலங்கை மண்ணில் எம் கன்னியர்கள் உருவாக்கம் பெற்றோம் 25 ஆண்டுகள்—

நிறைவு பெற்ற மகிமையினை நினைத்து இறைவனுக்குப் புகழ் இசைக்க நன்றியின் நாயகனுக்கு நன்றிப்புகழ் பாடிட இவ்வாண்டிலே இறைவன் எம்மை இருகரம் நீட்டி அழைத்து நின்றார்.

அவரின் அன்பினைச் சுவைத்திட அன்பு நங்கையரே உங்களை இருகரம் நீட்டி அழைக்கின்றோம்.

வாருங்கள். வந்து பாருங்கள் இறைவனைச் சுவைத்திட வாருங்கள்.

இறைபணிக்கு இதயத்தை உவந்தளியுங்கள்.

தொடர்பு :-
கார்மேல் மடம்,
கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

---

# ஞானஒளி வீசுகின்ற நந்தவனப் பூஞ்சுடராய்

ஞானஒளி வீசுகின்ற நந்தவனப் பூஞ்சுராடய்,
வானபரன்! நல்லருளை யேசுமகன்! ஏந்திவந்தார்.

மாட்சியும் மகிமையும் மக்களுக்கு மீட்பாக்கி,
ஆட்சிக் கொடிதாங்கி அன்பரசர்! உயிர்த்தார்.

ஒப்புரவு நீதிவழி சமாதானப் புதுவாழ்வில்
நற்சமூகம் உருவாக நம்யேசு உயிர்த்தார்.

மன்னிப்புக் கொடுத்து நட்புறவு பெறுகின்ற,
நம்பிக்கைப் பயணத்தில் ஒளிவீசி உயிர்த்தார்.

ஆதியும் அந்தமும் அழிவும் அற்றதோர்
சோதியில் உயிர்த்து சௌக்கியம் ஈந்தார்,
கண்ணீரும் செந்நீரும் கல்லறையில் மூடிவைத்து
மண்ணுலகில் மக்களது கூக்குரல்கள் கேட்கவந்தார்.

அஞ்சேல் அபயமென்று அகதிகளின் நெஞ்சத்தில்
மிஞ்சும் துயரகற்றி மேய்ப்பனாய்த் தோன்றினார்.

நீதிக்கு வாதாடி நேர்மைகரம் பிடித்துச்
சாதிக்கும் விடுதலையைத் தேவமகன் தேடிவந்தார்.

நீள்துயரம் நீக்கவந்த நிர்மலனே! எங்களது
ஆன்மீகம் தளைத்திருக்க மீண்டுமிங்கே உயிர்ப்பீரையா.

அன்பும் அருளும் அமைதியும் தயவும்
தங்கி வழிகின்ற நல்லிதயம் தாருமையா!

உம்மைநாம் அறியவும் உம்மையன்பு செய்யவும்
எம்மையினம் காணவும் உம்முடனே உயிர்ப்போம்.

அகிலம் முழுவதும் அடிபணிந் தும்மையே!
திகிலும் பயமும் தீர்த்தருள வேண்டினோம்.

ஞா. அரியமலர்
மிருசுவில்

# கார்மேல் சபையின் சிரேஷ்ட தாயார் யாழ்ப்பாணத்தில் ...

அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னிய சபையினர் இலங்கைக்கு வந்த 75 வது ஆண்டு விழாவும், யாழ் மறைமாவட்டத்திற்கு வந்து 50 ஆண்டு விழாவும் புனித யுவானியார் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட் திரு செல்வராஜாவின் அமைப்பில் 20/1/97 அன்று யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது.

கார்மேல் சபைக் கன்னியரின் சிரேஸ்ட தாயாரான இந்தியாவைச் சேர்ந்த அருட் சகோதரி எம். வின்சென்டும் இலங்கை கார்மேல் சபையினரின் மாகாணத் தலைவி அருட் சகோதரி. எம். டிலெக்ரா பர்ணாடாவும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

# இயேசுவுக்கு தீர்ப்பு வழங்கிய பிலாத்து யார்?

இயேசு குற்றமற்றவர், நீதிமான் என அறிந்திருந்தும் அவரை விடுதலை செய்ய பிலாத்து துணியவில்லை, மக்கள் கூட்டத்தைக் கண்டு அஞ்சினான். தன்னுடைய பதவி பறிபோய் விடுமோ என்ற நோக்குடன் அநீதியின் பக்கம் குரல் கொடுத்தவனாய் அவருக்கு மரணத் தீர்ப்பு அளித்தான். ஆம் அன்று அந்த உரோமையனான பிலாத்து இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்லும்படி தீர்ப்பளித்தான். ஆனால் இன்றோ கிறிஸ்து என்னும் பெயரை சூடிக்கொண்ட நாம் அனைவருமே எம் முறைகேடானவாழ்வினால் பிலாத்துவாக மாறி மீண்டும் மீண்டும் இயேசுவை கொலைக்களத்துக்கு கொண்டுசெல்கின்றோம் எமது கிறிஸ்தவ வாழ்வு சுயநலம் என்ற போர்வைக்குள்ளே முடங்கிக் கிடக்கின்றது. அன்பற்ற வாழ்க்கை சுயநலம், ஆணவம், பேராசை, பொறாமை, பணம் படைத்தோன் தாழ்ந்தோர் வறியோர் என்னும் பாகுபாடு, இனம், மதம், மொழி, என்னும் வேறுபாடு, பட்டம், பதவி, சொத்து, சுகம் போன்ற பிரிவினைகள், பழிக்குப்பழி வாங்கும் தன்மை போன்ற துர்க்குணங்களிலே மூழ்கிக்கிடக்கின்றோம். அன்று கிறிஸ்து கல்வாரியிலே மூன்று ஆணிகளில் தம்மையே கொடுத்தாரே யாருக்காக?

இன்று நாங்கள் நீதியையும் நேர்மையையும் குழிதோண்டி புதைக்கும் பொழுதும் பகைவர்களை மன்னிக்க மறுக்கும் போதும், உண்மைபேசக் கூசும் போதும், பிறர் நல்வாழ்வைக் கண்டு பொறாமை கொள்ளும் போதும், அடுத்தவனைச் சுரண்டி வாழும் போதும் அவருக்கு மரணத்தீர்ப்பு வழங்குகின்றோம் அல்லவா? எமக்காக எம் மீட்புக்காக, எம் நல் வாழ்வுக்காக மரித்த இயேசுவுக்கு நான் என்ன செய்யப் போகின்றேன்? அந்த அன்பின் இரட்சகர் எம் ஒவ்வொருவரையும் பார்த்துக் கேட்கிறார். நான் உனக்காக இவற்றை எல்லாம் ஏற்றுக் கொண்டேனே நீ எனக்காக என்ன செய்தாய்?

வ. இராசநாயகி

## நம்பிக்கை தளரேன்

கடல்பொங்கி ஊர்புகுந்து பெருமழிவு வருகின்றபோதிலும்
கடவுளுண்டென்று திடங்கொள்ளேன்.
நோவாகோத்திரத்தைக் காத்ததேவன் எமக்கு மவ்வழி
காட்டுவாரென்றுறிதிகொள்வேன்.
நாடு பகைகொண்ட போரினால் அழிகின்ற போதிலும்.
வருகின்ற யுகமுடிவு தீயினாலென்றிறைவன் கூறியதை
நான் மறவேன்.
பெரும்மலைசரிந்து மண்ணோடு உயிர்களை மறைக்கின்ற
போதிலும் மாபரனே உனைவெறுக்கேன்.
மனச்சஞ்சலமும் கவலைகளும் எனைநெருக்கிப்பிடித்த போதும்
மலங் கலங்கேன்.
ஏழ்மையும் வறுமையும் எனைக்கீழ்போட்டு நசிக்கின்ற
போதிலும்
ஆண்டவனே யென்னைக் காப்பாற்றென்றே குரலிடுவேன்.
உ(ள்)ளம் தளரேன்.
இத்துன்ப துயரங்களே தொடருமென்றாலும் இறைவனை
ஏசேன்.
எல்லால் கடவுள் சித்தமென ஏற்றிடுவேன்.
ஈசன் பரகதியில் எனக்குமோர் சிறு இடம் எப்போது
கிடைக்குமென ஏங்குகின்றேன்.
நடக்கின்ற செயல்யாவும் நன்மைக்கென்றேயுணர்வேன்
ஏனென்றால் நான் இறைவன் பாதத்தில் மண்டியிடும் சிறிய
தோர் ஆட்டுக்குட்டி அவர் பார்வைக்கு நானொரு சிறுபூண்டு
ஆனாலும்தேவன் என்னைக்காப்பாற்றுவாரென்ற நம்பிக்கையே
மிகவுண்டு.

அற்புதம்
செம்பியன்பற்று

## உலகை ஆள்பவர்

யேசு போலொருவர்
பிறந்ததிலை இப் - புவிதனிலே
பூதலம் மகிழ்ந்தது.
இப் புனிதன் வரவால்
தாயையும் தானே தேர்ந்து
கொண்டார்.
தனை எமக்கே தந்துவிட்டார்.
அரசன் இவரென அறிந்தனர்
கீழ்த்திசை ஞானிகளானோர்.
இடியேறு கேட்ட
நாகமாகினனே ஏரோதன்.
நோய்கள் தீர்ந்தன.
பேய்கள் அகன்றன.
அப்பம் பகிர்ந்தவர்
அன்புடன் வழங்கினார்.
குறைகாண வந்தனர்
மறைநூலறிந்தோர்
மருத்துவன் வேண்டும்
நோயுற்றோர்க்கேயென்றார்.
குற்றமற்றவர் எனக் கண்டான்
கோழை, பிலாத்து.
கொல்லவே வேண்டும் என்றது
குள்ளநரிக் கூட்டம்.
கோமகனைக் கழு வேற்றினரே
கொலைஞர் குழுவினர்.
எள்ளி நகையாடியதே
கயவர்கள் கூட்டம்.
பூமியதிர்ந்தது.
வானம் குமுறியது.
எந்தையே என் வேலை
முடிந்ததென்றார் தனையன்.
என்ன விந்தையிது
கல்லறை வெறுமை ஆனதே
மாபரன் எங்கே!
இது மரியாள் குரலே
மரியே என்றார்
மாபரனாரும்.
உயிர்த்த செய்தி
பரவியதே உலகினிற்கு.
உண்மையிலே தேவ
மைந்தனிவர் என்றனர் பலர்.
இன்றும் உலகை
ஆள்பவர் இவரே.

செல்வி அனிற்றா லொறெற்

## ஊதாரியானேன்

பாவமும் பாவத்தின் சாபமும் நீக்கி உயர்
பரலோக வழி திறந்தாய்
பந்தியிற் பாதங்கள் கழுவியே தாழ்ச்சியின்
பக்குவம் பயில வைத்தாய்
வேதனை தாங்கிடா தேங்கியே வாழ்பவர்
வீடெலாம் தேடி அன்பை
விதைப்பதே மனிதனின் முதற்பயன் என்பதை
விருந்திலே அருந்த வைத்தாய்
சோதனை வேளைவான் சித்தமே பாக்கியச்
சுகிர்தமென் றுணர வைத்தாய்
சோர்ந்துயிர் தவிப்புறச் சிலுவையிற் பாதகர்
சொல்லொணாப் பழி பொறுத்தாய்
நீதியில் தவறினேன் ஆணவத் திமிரினால்
நீசன் ஊதாரியானேன்
நிருமலா திருமலர்ப் பாதமே சரணென
நினைந்திடக் கருணை கூர்வாய்

யாழ் ஜெயம்

## சாட்சியம் பகர்வோம்

அருள்தரும் மாபெரும் யூபிலி ஆண்டை
அடைந்திட அடியொன்று பதிக்குமிவ்வேளை
இறைவார்த்தையின் இனிமை இகமெங்கும் பரவப்
பகிர்தலே சிறந்த வழியெனக் கொள்வோம்.

உலகினர் பாவச்சுமைதனை ஏற்று
உயர்மலைக் கல்வாரி தனிலுயிர் துறந்து
உயிர்த்தெழுந்திட்ட உத்தமர் யேசு
இறுதியில் ஒற்றுமை வாழ்வினைத் தொடர்வோம்.

உயர்வு தாழ்வு பேதமை அகற்றி
ஒன்றாகக்கூடி இறைவனைப் புகழ்வோம்.
ஆதியில் இறைமக்கள் வாழ்ந்தது போன்று
அனைத்தையும் பகிர்ந்து அன்பராய் வாழ்வோம்.

ஆலயந்தனில் அதிகாரமேன்மை சுயநலந்தவிர்த்து
சமநிலை பேணிச் சமத்துவம் காப்போம்.
தேவையை, சேவையை சமூகத்திற் பகிர்வோம்.
திருமறை வாழ்வால் சாட்சியம் பகர்வோம்.

— எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை.

## இறைக்கதவுகள் திறக்க...

வைகறைப் பூங்காற்று வீரக் கதை பேச
வையகம் எங்கும் உன் வெற்றியின் புகழ்பாட
மகிமை எனும் ஜெயக்கொடி ஏந்தி
உயிர்த்தாய் உன் நாமம் வாழி!

வீழ்ந்தாய் மண்ணின் வித்தாக
எழுந்தாய் விசுவாச முத்தாக
வாழ்வாய் சத்தியத்தின் மூச்சாக
தொடர்வோம் உன்பாதையில் துணிவாக!

சிந்திக்க உன் சிறப்புகள் புரிய-உனைச்
சந்திக்க உறவின் கோலங்கள் தெரிய
மன்னிக்க இதயங்கள் திறக்க
விண் சந்திப்பில் எமக்கும் இறைக் கதவுகள் திறக்கும்!

ஆக்கம்:-
திருமதி. B.J. றொபின்சன்.
உரும்பிராய் கிழக்கு.

## நீ உயிர்த்து விட்டாயா?

ஞாயிறு விடிந்தது
'உயிர்த்த ஞாயிறு''
உனது பாவத்திற்கு
உயிரைக் கொடுத்தவர்
சாவை வென்று
தரணியில் நின்று
உயிர்த்து விட்டார்.
அது; நடந்து முடிந்த
கதை.
ஆனால்,
அவரோடு இறந்து
''அவரோடு உயிர்த்த நீ
உயிர்த்த வாழ்வு'' வாழ்ந்து-
கொண்டிருக்கின்றாயா?
இல்லையேல்,
தினம் தினம் இறந்து-
-கொண்டிருக்கின்றாயா?
உனது அகங்காரத்தாலே
உனது கோபத்தாலே
உனது பொறாமையினாலே
விட்டுக்கொடுக்க மனமில்லாத
தன்மையினாலே
மன்னிக்க முடியா
கல் நெஞ்சத்தாலே
தினம் தினம் இறந்து-
–கொண்டிருக்கிறாயா?
அப்போ நீ எப்போது
உயிர்ப்பது?
இந்த உயிர்த்த ஞாயிறும்
உனக்கும்,
''வெறும் உயிர்த்த
ஞாயிறு தானா''?
இல்லையேல்,
நீ உயிர்த் தெழுந்த ஞாயிறாக
இது இருக்கப் போகின்றதா?
சிந்தி! செயற்படு!
உயிர்த்த கிறிஸ்து
உன்னோடு....

S.வின்சென்ற்

## மனிதம் உயிர்த்திட வழி செய்வாய்

கடந்த கால நிகழ்வுகள்
மறக்க முடியா நினைவுகள்
வீதிகள் ஓரங்கள்
விம்மல்கள் ஓலங்கள்
ஏனிந்த அவலங்கள்
மானிடரே சிந்தியுங்கள்
காட்டிக் கொடுப்பவரும்
காத்திருந்து கொல்பவரும்
தீர்ப்புக்கள் வழங்குபவரும்
ஏளனம் செய்பவரும்
யூதாஸ் தானா?
பிலாத்து ஒருவனா?
யூதர்கள் மட்டுமா?
இப்பட்டியலில் நீ எவ்விடம்?
நீ மட்டும் கிறிஸ்துவா?
இவர்களை ஏன் குறை சொல்லி
சாதிக்கும் வேலி கட்டி
சமத்துவத்தை பிரித்த நீ
சமூகத்தின் துரோகியா?
சமரச உடன்படிக்கையா?
அடுத்தவன் சொத்தினை
அபகரிக்க நினைக்கையிலே
எனக்கொரு இந் நிலை
ஏற்பட்டால் எந் நிலை
அது தானே அவனுக்கும்
அறிந்தாயா? சொல் மனமே
தீமைகள் அநீதிகள்
குரோதங்கள் வேற்றுமைகள்
அனைத்தையும் கல்லறைக்குள்
புதைத்து விட்டு
மனிதம் உயிர்த்திட
வழி செய்வாய்

திருமதி. R. அன்ரன்
உரும்பிராய்

## இத்தாலியில்- நத்தார் ஒளிவிழா

நத்தார் பண்டிகையை முன்னிட்டு ''றெஜ்ஜோ எமிலியா தமிழர் கழகத்தினரால்'' நடாத்தப்பட்ட மாபெரும் ''ஒளிவிழா'' 21 - 12 - 1996 அன்று இத்தாலி நாட்டிலுள்ள றெஜ்ஜோ எமிலியா நகரில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இறைவாழ்த்துப் பாடல்களும், குழந்தை யேசுவின் பிறப்பை சித்தரிக்கும் சிறார்களின் ''தேவபாலன்'' ஒப்புதல் நடனங்களும், நத்தார் கோலாட்ட நடனங்கள், பரத நாட்டியம் ''பச்சைக் கிளி'' நடனம் என்பன மண்டபத்தில் இருந்த அனைவரையும் மகிழ்ச்சியூட்டியது. றெஜ்ஜோ எமிலியா தமிழ் சிறார்கள் அந்நிய நாட்டு மொழியிலே கற்று வருகிற, சொந்த நாடே தெரியாத எமது சில சிறார்களுக்கு கூட எமது மொழியிலே, எமது கலாச்சார பாவனையிலே பாடல்களையும், நடனங்களையும் பயிற்றி எல்லோராலும் வரவேற்கத்தக்க முறையில் மேடையேற்றியது இங்கே குறிப்பிடத்தக்கது. இளைஞர் கூட்டணி ஒன்றினால் நடாத்தப்பட்ட ''குளிரே குளிரே'' வில்லுப்பாட்டின் மூலம் தற்பொழுது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் பிரச்சனைகளின் மத்தியில் மலர்ந்த ஒரு காதல் ஜோடியின் கதையை அழகாக சித்தரித்து அரங்கத்திலுள்ள அனைவரையும் குலுங்க குலுங்க சிரிக்க வைத்தார்கள். 1980 களின் ஆரம்ப பகுதியிலே எமது நாட்டின் நிலைமையை சித்தரிக்கும் முகமாக உருவாக்கப்பட்ட ''நான் தமிழன்'' நாடகம் எல்லோராலும் வரவேற்கப்பட்டது. ''சப்தஸ்வரவம்'' இன்னிசை குழுவினரின் இன்னிசைவிருந்துடன் இனிதே நிறைவுற்ற இந்நிகழ்ச்சியில் அருட்திரு ஜெயறஞ்சனும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சி கத்தோலிக்க மக்களின் பண்டிகையாக இருந்த பொழுதுங் கூட இந்நிகழ்ச்சியை சிறப்பிக்க வேற்று சமய மக்களின் மனம் மலர்ந்த பங்களிப்பு இங்கே குறிப்பிடத்தக்கது. இறை விசுவாசத்தை வெளிக்காட்டும் நோக்குடனும் வேற்று தேசத்திலே எமது மக்களின் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தையும் எடுத்தியம்பும் வகையில் நிறைவேறிய இவ்விழாவை பார்வையிட்ட இத்தாலிதேசத்து மக்களிற்கே ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது மட்டுமன்றி அவர்களின் பாராட்டுக்களையும் பெற்றது.

ஐரோப்பிய நாட்டிலே பல வருடங்களாக பாவமன்னிப்பு பெறாது பாவக்கறைகளுடன் வாழ்ந்துவரும் எம்மவர்களுக்கு பாவசங்கீர்த்தனம் வழங்கியதுடன், எத்தனையோ வருடங்களாக நத்தார், புதுவருட இரவு திருப்பலிகளை காண முடியாத எமக்கு சொந்த மொழியிலேயே இரவு திருப்பலி மூலம் இப்புத்தாண்டை பிறப்பித்தது மட்டுமன்றி, திருவருட்சாதனங்களையும் வழங்கிய அருட்தந்தை S. K. தேவராஜாவிற்கும் அவரை அனுப்பிவைத்த மன்னார் ஆயருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமக்கு நிரந்தரமாக ஒரு குருவானவரை சேவையாற்ற, எம்மத்தியில் அனுப்ப வேண்டுமென்றும் வேண்டி நிற்கிறோம்.

ஜெ. அ. தயானந்தராஜா
(பெனோ)
இத்தாலி

## 23வது ஆண்டில் காலடி...

ஈழத்தின் ஒரே உளவியல் சஞ்சிகையான ''நான்'' இடம் பெயர்வினால் ஏற்பட்ட சிறிய இடைவெளியின் பின் தனது 23வது ஆண்டில் காலடி வைக்கிறான் என்று ''நான்'' ஆசிரியர் அருள்திரு S. எட்வின் வசந்தராஜா O.M.I காவலனுக்குக் கருத்து வெளியிட்டார். தை–பங்குனி சிறப்பிதழுக்கு படைப்புக்களை அனுப்ப விரும்புவோர் உடன் அனுப்பவும். கட்டுரைகளுக்கோ, சந்தாவிற்கோ, விலாச மாற்றங்களைத் தெரியச் செய்யவோ,

''நான்'' - ஆசிரியர்
அ.ம.தி. குருமடம்,
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
என்னும் விலாசத்துடன்
தொடர்பு கொள்ளவும்.

# செத்துப் போனவள்

நான் அவளிடம் காதல் வெறி கொண்டிருந்தேன். எதற்காக நாங்கள் காதலிக்க வேண்டும்? எத்தனை பெரிய உலகத்தில் ஒரே ஒரு ஜீவனை மட்டும் பார்த்துக் கொண்டு, ஒரே ஓர் ஆசையை மட்டும் நெஞ்சில் வளர்த்துக்கொண்டு ஒரே ஒரு பெயரை மட்டும் மந்திரச் சொல் மாதிரி வாயில் உச்சரித்துக் கொண்டிருப்பது புதுமையிலும் புதுமை அல்லவா? அந்த ஒரு பெயருக்குத்தான் எத்தனை வலிமை? காதலுக்கு எப்போதும் ஒரே மாதிரிக் கதைதான். வேறு கதை கிடையாது. நான் அவளைச் சந்தித்தேன்; காதலித்தேன். அவ்வளவுதான், ஓராண்டு முழுவதும் அவளுடைய அன்பின் அணைப்பில், பார்வையில், பேச்சில், உடையில், உபசரிப்பில் கட்டுண்டு கிடந்தேன். முழுவதும் அவள் என்னை ஈர்த்து விட்டாள். அவள் திடீரென்று இறந்து விட்டாள்.. எப்படி? எனக்குத் தெரியாது; எனக்கு இப்போது ஒன்றுமே தெரியாது.

மழை பெய்த ஒரு நாள் மாலை அவள் எங்கோ வெளியில் சென்றுவிட்டு, சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே வந்தாள். அடுத்த நாள் இருமினாள்; அப்புறம் ஒரு வாரம் இருமிக்கொண்டே படுக்கையில் கிடந்தாள்.

வைத்தியர்கள் வந்தார்கள்; மருந்து கொடுத்தார்கள்; போனார்கள். அவளுடைய கரங்கள் நெருப்பாய்ச் சுட்டன. கண்களில் சோகமும், புத்தொளியும் ஒன்றாய்ப் பிரகாசித்தன. நான் அவளிடம் பேசினேன், அவள் பதிலளித்தாள். நாங்கள் என்ன பேசிக் கொண்டோம்? எனக்கு இப்போது தெரியவில்லை. நான் மறந்து விட்டேன், எல்லாவற்றையும்; ஆம்; எல்லாவற்றையுமே மறந்து விட்டேன். அவள் இறந்தாள். அவளுடைய கடைசிப் பெருமூச்சை, பலவீனமான மெல்லிழை போன்ற அந்தக் கடைசிச் சலனத்தை, நான் கவனித்தேன். ஆ! அவள் போய் விட்டாள். எனக்கு அவளுடைய சவப் பெட்டி நன்றாய் நினைவில் இருக்கிறது. அதற்குள்ளே அவளை வைத்து ஆணி அறைந்த அந்தச் சம்மட்டி அடியை என்னால் மறக்க முடியவில்லை.


அவள் புதைக்கப்பட்டாள். என்னுடைய அந்த அவள்! பாழும் படுகுழியில் அவள்! நண்பர்கள் வந்தார்கள். போனார்கள். நான் வெளியில் புறப்பட்டேன். கால் போன போக்கில் தெருவில் ஓடி அலைந்தேன். பிறகு களைத்து வீடு திரும்பினேன். மறுநாளே வெளியூருக்குப் பயணமானேன்.

நேற்றுத்தான் திரும்பவும் பாரிஸ் நகரத்திலிருந்த என் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

ஐயோ! திரும்பவும் எங்கள் படுக்கை அறைக்கா? – எங்கள் கட்டில், எங்கள் மெத்தை, எங்கள் பஞ்சணை, எங்கு பார்த்தாலும் செத்துப்போன அவளுடைய உயிர்த்துடிப்பை நினைவூட்டும் அழகுச் சின்னங்கள்! என்னால் தாங்க முடியவில்லை. தாங்கவே முடியவில்லை. அந்த மாடி அறையின் சன்னலைத் திறந்து கொண்டு தெருவில் விழுந்து சாகலாமா என்று கூட நினைத்தேன். திரும்பிய பக்கமெல்லாம் அவள் இருந்தாள். என் துக்கத்தை நான் எங்கு சொல்வேன்?

நான் வெளியில் போனேன். ஒரு நோக்கமில்லாமல், விருப்பமில்லாமல் எங்கு போகிறேனென்று தெரியாமல் போனேன். கால்கள் என்னைச் சவக்குழிகள் நிறைந்த ஊரின் ஒதுக்குப்புறத்திற்குக் கொண்டு வந்து விட்டன.

அவளுடைய சவக்குழியின் மேல் பளிங்குச் சிலுவை மின்னியது. சிலுவையில் செதுக்கப்பெற்ற அந்த வார்த்தைகள்!



‘அவள் காதலித்தாள்; காதலிக்கப் பட்டாள்; இறந்தாள்.’

அவள் அங்கே, கீழே அழுகிப்போன குவியலாய், புழு வரித்த கூடாய்க் கிடக்கிறாளே! என்ன கொடுமை! நான் கல்லறைமீது விழுந்து, அதில் முகம் பதியத் தேம்பித் தேம்பி அழுதேன். நேரம் போனது தெரியவில்லை. நன்றாய் இருட்டிக் கொண்டு வந்தது.

எனக்குத் திடீரென்று ஒரு விசித்திரமான ஆசை தோன்றியது. காதல் வெறி கொண்டவனை ஆட்டுவிக்கும் விபரீத ஆசை. நான் அந்த இரவை அவளருகில் கழிக்க வேண்டும். அதை எங்கள் கடைசி இரவாக்கிக் கல்லறையைக் கண்ணீரால் கழுவ வேண்டும். ஆனால் என்னைக் காவலாளி யாரும் பார்த்துவிட்டால் என்ன செய்வது? நன்றாக இருட்டுகிறவரையில் ஒரு பக்கம் மறைந்திருந்து, பின்பு என் காதலியிடம் வந்தால் என்னை யாரும் கவனிக்க முடியாது.

நான் மறைந்து கொள்வதற்காக ஓரமாக நடந்தேன். இந்தச் சிறிய நகரம், செத்துப் போனவர்களின் நகரம், உயிரோடிருப்பவர்களின் நகரத்தை விட எத்தனை சிறியது! ஆனால் உயிரோடிருப்பவர்களை விட செத்துப் போனவர்களே பன்மடங்கு அதிகம். நாம் வாழ்வதற்கு நாலடுக்கு மாடி வேண்டும்; விலாசமான தெருக்கள் வேண்டும். இன்னும் காலைக் கதிரொளி, நீரோடையின் தெளிந்த தண்ணீர், மென்காற்று எத்தனை எத்தனையோ தேவைகள் நமக்கு.

ஆனால் இறந்துபோன பரம்பரைக்கு, நாம் உலகம் தோன்றிய நாள் முதல் இதுவரை ஒதுக்கி வைத்திருப்பது, ஊரின் தேடுவாரற்ற ஒரு மூலை. மண் அவர்களை ஏற்றுக் கொள்கிறது. சூன்யம் அவர்களை உருக்குலைக்கிறது. அப்புறம் ஒன்றுமே இல்லை; ஒன்றுமே இல்லை!

நான் தனியாக ஒரு பசுமரத்தின் பின்னால் மறைந்து கொண்டு நின்றேன். பின்பு மரத்தில் ஏறிக் கிளையைப் பற்றிக்கொண்டு சற்று நேரம் இலை மறைவில் தொங்கினேன்; நன்றாக இருட்டிப் போன பிறகு மெதுவாய் இறங்கித் திருடன்போல் அடிமேல் அடிவைத்து நடந்தேன்.

மடிந்து போனவர்களுக்கு மத்தியில் நீண்ட நேரம் அலைந்தேன். அவளைக் காணோம். எங்கே அவள்? அகல விரித்த கரங்களுடனும், நன்றாய்த் திறந்த கண்களுடனும் நான் அலைந்தேன். எதிர்ப்பட்ட கல்லறைகளில் நான் தட்டு தடுமாறி முட்டிக் கொண்டதுதான் மிச்சம். முழங்காலில், முகத்தில் நெஞ்சில் கணுக்காலில் எங்கும் ஒரே வலி. வழிதடுமாறிய குருடனாக நான் ஒவ்வொன்றையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். கற்கள், சிலுவைகள், இரும்புக் கம்பிகள், வாடி உதிர்ந்த பூமாலைகள். அவள் பெயரைக் கண்டு பிடிப்பதற்காகக் கல்லறைகளின் மேல் விரல்களினால் தடவிப் பார்த்தேன், என்ன ஏமாற்றம்! என்ன இருட்டு! அவளைக் காணவில்லையே!

நிலவற்ற இருள் என் நெஞ்சைப் பற்றி உலுக்கியது. இருபுறமும் வரிசை வரிசையாகப் புதைகுழிகள்! எங்கு பார்த்தாலும், வலதுபுறம், இடதுபுறம், முன்னால், பின்னால், சுற்றிலும் நெடுகிலும் நீக்கமற நிறைந்த புதைகுழிகள்! என்னுடைய முழங்கால் எலும்புகள் ஆட்டம் கண்டன; சோர்ந்துபோய் ஒரு கல்லறையின் மேல் உட்கார்ந்தேன். பயங்கரமான இருளின் அமைதி என்னுடைய நெஞ்சுத் துடிப்பே பெரிதாய் ஒலித்தது. அத்துடன் இன்னும் ஏதோ ஒரு சத்தம்! என்ன அது? புரியாத குழப்பம் நிறைந்த சத்தம்? எங்கிருந்து வருகிறது இந்தச் சத்தம்! பயம் நிறைந்த என் மனதிலிருந்தா... உலகத்தையே விழுங்கிய இந்த இருளிலிருந்தா? மண்ணிலிருந்தா விண்ணிலிருந்தா அல்லது பிணங்களால் விதைக்கப்பெற்ற இந்த மண்ணின் அடித்தளத்திலிருந்தா? நான் சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன்.

ஆ? என்ன இது! பயத்தினால் அலறிச் செத்துப்போக இருந்தேன்.

திடீரென்று நான் உட்கார்ந்திருந்த கல்லறையின் மேற்பரப்பு நழுவுவதுபோல் தோன்றியது. உண்மையில் நழுவத்தான் செய்தது. உள்ளிருந்து யாரோ ஒருபுறமாய்ப் பிடித்து அதைத் தள்ளினார்கள். ஒரே தாவாய் நான் எதிர்த்தரையில் தாவி விழுந்தேன். சற்றுமுன் நான் உட்கார்ந்திருந்த கற்பலகை நேரே நட்டமாய் எழும்பி நின்றது. அதற்குள்ளிருந்த எலும்புக்கூடு தன்னுடைய வளைந்த முதுகால் அந்த மூடியைத் தள்ளுவதைக் கண்டேன். இப்போது எனக்குக் கண் நன்றாகத் தெரிந்தது.

அந்தக் கல்லறையின் மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களைக் கவனித்தேன்.

‘‘இங்கேதான் ஜாக் ஆலிவர் உறங்குகிறார். நல்ல மனிதர், யோக்கியர், மனைவி மக்களை உயிராக நேசித்தவர், ஐம்பத்தோராவது வயதில் அமைதியாகக் கர்த்தரின் திருவடி நிழலை அடைந்தார்.’’

இப்போது அந்த எலும்பு மனிதன் அதை ஒரு முறை வாசித்தான். பின்பு அருகில் கிடந்த ஒரு கூர்மையான கருங்கல்லை எடுத்து அதை ஒன்றுவிடாமல் அழித்தான். பிறகு தன்னுடைய ஆள்காட்டி விரல் எலும்பால் அதே இடத்தில் வேறெதையோ எழுதினான். கரிய நிறச் சுவரில் நெருப்பால் எழுதிய எழுத்துக்கள்போல் அவை பளிச்சிட்டன.

‘‘இங்கேதான் ஜாக் ஆலிவர் உறங்குகிறார். கெட்ட மனிதர், அயோக்கியர், மனைவியைக் கொடுமைப்படுத்தி மக்களைத் துன்புறுத்தி, அக்கம்பக்கத்தாரை ஏமாற்றியவர், இவருடைய சாவு துன்பம் நிறைந்தது.’’

எலும்பு மனிதன் தான் எழுதுவதை நிறுத்தி அசையாமல் நின்று அதைப்பற்றி யோசித்தான். நான் சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன். என்ன விசித்திரம்! எல்லாக் கல்லறைகளும் திறந்திருந்தன. எல்லா எலும்புக் கூடுகளும் தங்கள் சொந்தக்காரர்கள் எழுதிவைத்த அழகான பெயர்களை அழித்துவிட்டுத் தங்கள் வாழ்வின் பயங்கரமான உண்மைகளை எழுதிக் கொண்டிருந்தன.

இருட்டில் ஒளியாகத் தெரிந்த உண்மைகளைக் கண்டேன். எல்லோருமே அயோக்கியர்கள், ஏமாற்றுக்காரர்கள். திருடர்கள், பொய்யர்கள், வஞ்சகர்கள், பொறாமைப் பேய் பிடித்தவர்கள். இவர்கள் அருமைத் தந்தைகளாம், உண்மைக் கணவர்களாம். உத்தம புத்திரர்களாம், கற்புக்கரசிகளாம், நாணயம் மிக்க நல்ல மனிதர்களாம்!

ஆத்மாவின் சூழ்நிலை பெற்ற அந்தச் செத்த மனிதர்கள் ஒரே நோக்கத்தோடு வாழ்வின் பயங்கரமான, கொடுமையான, தூய்மை நிறைந்த உண்மைகளை எழுதினார்கள். உயிர் வாழும் உலகம் உண்மைகளை ஒதுக்குவது போலும் மறைப்பது போலும் தெரிந்துகொள்ளாத மாதிரி நடிப்பதுபோலும் அவர்கள் செய்யவில்லை.

அவள் கூட உண்மையை எழுதுவான் அல்லவா?

பயம் பறந்தது. கல்லறைகளுக்கு மத்தியில் பிணங்களுக்கு மத்தியில், எலும்புக் கூடுகளுக்கு மத்தியில் நான் வெறி பிடித்து அவளைத் தேடி ஓடினேன், ஒலிப்பெருக்கில் அவளை விரைவில் கண்டு பிடித்து விடலாம்.

தூரத்திலிருந்தே அவளைக் கண்டுபிடித்து விட்டேன். புதுத் துணியால் மறைந்திருந்த அவள் முகந்தான் எனக்குத் தெரியவில்லை.

சற்று முன்பு, ‘காதலித்தாள்; காதலிக்கப்பட்டாள்; இறந்தாள்’ என்று எழுதப்பட்டிருந்த அவளுடைய பளிங்குச் சிலுவையில் இப்போது வேறு எழுத்துக்கள் தெரிந்தன.

‘தன் காதலனை ஏமாற்றி ஒரு நாள் மழையில் வேறொருவனைத் தேடி வெளியே போனாள். மழையினால் காய்ச்சல் வந்து இறந்தாள்.’

அப்புறம் என்ன நடந்ததோ தெரியாது. என்னை அந்தப் புதைகுழி அருகிலிருந்து மறுநாள் காலை சுய நினைவு இல்லாத நிலைமையில் தூக்கி வந்தார்களாம்.

நன்றி

மாபசான் சிறுகதைகள்

தமிழில் : அகிலன்

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு 97

அடைக்: தின்னாம உண்ணாம சேர்த்ததெல்லாம் சொல்லாம கொள்ளாம போச்சுதண்ணை.

குருசு: உது நடக்கும் எண்டு அப்பவே நற்செய்தியில சொன்னது கேட்டியளே தம்பி?

அடைக்: பொருட்களும் தேவைதானே அண்ணே?

குருசு: ஓம் தம்பி ஓம், ஆக பொருட்கள் மட்டும் தான் தேவை எண்டு அதில ஆசைவைச்சு மனிசரை வெறுக்கிறியளே. இதால எத்தின பிரிவுகள் குடும்பத்துக்குள்ளயே வளருது பாத்தியளே!

அடைக்: ஒத்து வராட்டி ஒதுங்கி வாழுறது நல்லது தானே அண்ணே!

குருசு: பொருட்களைப் பாவிச்சு மனிதரை அன்பு வைக்கத்தான் கடவுள் படைத்தார். ஆனா நீங்களோ மனிசரை பாவிச்சு பொருட்களை அன்பு வைக்கிறதால தானே இத்தனை அழிவுகளும் எத்தனை பிரிவுகளும் வளருது பாத்தியே தம்பி!

# கிளரீசிய வேத போதக சபை

## உங்களை அழைக்கின்றது!

**இளைஞனே!**

ஓர் வேலைக்காக உன்னை அர்ப்பணிப்பதை விடுத்து, அர்ப்பணவாழ்வையே உன் வேலையாக ஏற்பாயா?

அவ்விதமாக உன்னை நீ அர்ப்பணமாக்கிட விரும்பினால் இதோ எம்மோடு செயல்பட முன்வா!

''இறைவனின் மகிமையும் மனுக்குலத்தின் மீட்பும்''

இதுவே எமது விருது வாக்கு...
இன்று இயேசு உன்னையும் பார்த்து சொல்கிறார்:
''என்னைப் பின்செல்'' என்று

**ஏன் ?**
நற்செய்தி பரப்பிட!
அவர் பணி தொடர!
உலகில் அன்பை அமைதியை
நிலைநாட்ட!

**தம்பி,**

உமக்கும், நீர் ஓர் துறவியாகவோ, குருவாகவோ வரவேண்டும் என்ற ஆவல் இருந்தால், உம் விருப்பத்தை எமக்கு அறியத்தாரும். எமது சபையில் நீர் அருட் சகோதரராகவோ அல்லது குருவாகவோ இருந்து நற்செய்திக்கு சான்று பகர இடமுண்டு.

நீர் எம்மோடு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Vocation Promotor**
**St. Claret Centre**
**Claretian Missionaries,**
**55 Ragama Road,**
**Welisara, Ragama.**
**Phone : 958542**

A / 14 / 97

# யாழ். புனித மரியன்னை பேராலய புனித வார நிகழ்ச்சி நிரல்

புனித வார வழிபாடுகள் ஆயர் தலைமையில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| குருத்து ஞாயிறு | 23.3.97 | | |
| | காலை | 6.30 | திருப்பலி |
| | | 8.00 | திருப்பலி |
| | மாலை | 4.30 | திருப்பலி |
| புனித வார திங்கள் | 24.3 97 | | |
| | மாலை | 4.30 | திருத்தைலம் மந்திரிக்கும் சடங்கு |
| புனித வியாழன் | 27.3.97 | | |
| | மாலை | 4.30 | இராப்போசன நினைவுத்திருப்பலி நற்கருணை ஆராதனை |
| புனித வெள்ளி | 28.3.97 | | |
| | காலை | 6.30 | வெளியரங்கில் திருச் சிலுவைப் பாதை |
| | மாலை | 4.00 | மாலை வழிபாடு |
| புனித சனி | 29.3.97 | | |
| | காலை | 6.30 | தியான வழிபாடு |
| | மாலை | 4.30 | திருவிழிப்பு |
| உயிர்ப்பு ஞாயிறு | 30.3.97 | | |
| | காலை | 6.30 | திருப்பலி |
| | | 8.00 | திருப்பலி |
| | மாலை | 4.30 | திருப்பலி |

*வழிபாடுகள் புதிய நேரப்படி நடைபெறும்.*

ஆலய மேய்ப்புப் பணி சபை

---

6 ஆம் கிழமை வழிபாடுகள் (21-3-97)

## யாழ் அடைக்கல அன்னை ஆலயம் (O.L.R)

காலை 6.15 மணிக்கு திருப்பலி.
மாலை 4.00 மணிக்கு
திருச்சிலுவைப்பாதை.
ஆசந்தி

பங்குத்தந்தை
யாழ். அடைக்கல அன்னை ஆலயம் (O.L.R)

A/19/97

# தவக்கால தியானம்

பிரான்சிஸ்கன் 3ம் சபையினரின் தவக்காலதியானம் மரியன்னை பேராலயத்தில் 22.02.97 செப வழிபாடுகளுடன் ஆரம்பமாகியது. பிரான்சிஸ்கன் 3ம் சபைத்தலைவர் திரு L.C. நீக்கிலசின் அழைப்பை ஏற்று அயல் பங்குகளில் உள்ள மரியாயின் சேனை, புனித வின்சென்ற் டி போல் சபை, திரு இருதய சபை அங்கத்தவர்களும் இத் தியானத்தில் பங்கு பற்றினர்.

அருட் தந்தை S. ஆனந்தக்குமார் புலம்பல் ஆகமம் 5ம் அதிகாரத்தை செபமாகக் கொண்டு இக்கால மக்கள் படும் துயர்களை நினைவு படுத்தி ஞான ஒடுக்கத்தில் பங்கு பற்றியவர்களை ஆழமாக தியானிக்கும் முறைக்கு ஆயத்தம் செய்தார். அருட் தந்தை R. H. சகாயநாயகம் உடலை யல்ல, உள்ளத்தை கிழித்துக் கொள்ளுங்கள் என்ற வாக்கியத்தை கருப் பொருளாகக் கொண்டு இறைவனுடன் ஒப்புரவாவதில் உள்ள நிலைப்பாடுகளை விளக்கினார். சபைக் கர்த்தர் அருட் தந்தை J.P.E செல்வராசா பிரான்சிஸ்கன் சபை ஸ்தாபகர் புனித பிரான்சிஸ் அசிசியார் தூயவராக சீவித்தாலும், தவக்காலத்தில் குகையில் ஏகாந்தமாக சீவித்து தன்னை ஒரு பெரும் பாவி என்று அவரின் சபைத் துறவிகளைக் கொண்டு அழைக்கும் படி செய்து பாவ நிலையை உணர்ந்து வாழ்ந்தார். இப்புனிதரின் மாதிரிகையை அவரின் சபையை சேர்ந்தவர்கள் இத் தவக்காலத்தில் பின்பற்றி இறைவனுடன் ஒப்புரவாக வேண்டுமென்று வற்புறுத்தினார். அருட்தந்தை M. J. செவஸ்ரியன் (C.R.) திருப்பலி மறையுரையுடன் அரை நாள் தியானம் முடிவெய்தியது.

தகவல் திருமதி. பரியதாசன் எலிசபேத்
பொ.நி.பி.சபை(செயலாளர்)

# நாங்கள்...

,'இவற்றை எல்லாம் இனி எப்போ மீளக்கட்டி எழுப்புவதோ'' என அங்லாய்த்துக் கவலை தெரிவித்தார்.

உரும்பிராய், அச்சுவேலி, இளவாலை ஆகிய இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்ட விவசாய சங்க அங்கத்தவர்களை நேரடியாக தரிசித்து தொடர்ந்தும் விவசாயப் பணிகளுக்கு உதவ ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

யாழ் சமாதானத்திற்கும் நல்லெண்ணத் திற்குமான குழுவை ஆயர் இல்லத்தில் சந்தித்து யாழ் நிலமைகளையும் கேட்டறிந்தார்.

புனித பத்திரிசியார் கல்வி நிறுவனத்தையும், சென்றோக் தும்புத் தொழிலகத்தையும் பார்வை இட்டு மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைந்து யாழ் மனித முன்னேற்ற நிலையம் நிவாரணப் பணிகளை விட்டு இது போன்ற முன்னேற்றப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று இயக்குனர் அருள்திரு சூசைநாதனைப்பாராட்டினார்

---

## 1ஆம் வருட நினைவஞ்சலி



அமரர் சவிரிமுத்து
அந்தோனிப்பிள்ளை
(ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்)

| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 10.07.1927 | 01.04.1996 |

கருணையின் வடிவாக, கலங்கரை விளக்காக எங்கள் உள்ளங்களில் என்றும் நிலையாக நிற்கும் அன்புருவே! எங்கள் கண்களில் இருந்து உதிரும் ஒவ்வொரு துளிக் கண்ணீரும் உங்கள் உயர்ந்த உள்ளத்தில் உதயமான குணங்களின் நிகழ்வுகள், ஒவ்வொன்றும் எங்கள் நினைவில் என்றென்றும் நிழலாடுகிறது. உங்கள் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிக்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் 2-4-97 அன்று மாலை 5 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலியில் பங்குபற்றி இவருக்காக மன்றாடும் வண்ணம் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள்.
கூமாங்குளம்,
வவுனியா

A/16/97

# யாழ் திருச்சபை...


முதல் கத்தோலிக்க சிங்கள அரசன் தர்மபாலாவும் டொன் யுவான் என்ற பெயர் பூண்டிருந்தான். பணம், பதவி, பொருள் ஆசையால் தூண்டப்பட்டு மனம் மாறிய சில போலிக் கிறிஸ்தவர்களாலேயே 'இம்மண்ணில் ஏறத்தாழ 50வீதம் கிறிஸ்தவர்கள் இதற்காகவே மனம் மாறினர், என்று குவெரோஸ் என்ற ஆசிரியரைக் குறிப்பிட வைத்தது.

வண. யோசவ்வாஸ் அடிகள் காலத்தில் இவர்கள் தொகை மிகச் சிறிது. இவர்களில் பலர் பெயரளவில் டச்சு சீர்திருத்தச்சபை அங்கத்தவர்களாயினர். பல வருடங்கள் ஊழியம் புரிந்த பல்டேயஸ் என்ற டச்சுப் பாதிரியார், இப்போலிக் கிறிஸ்தவர்களின் வெளிவேடப்போக்கால் மனமுடைந்தார். பின்னர் வெளியேற்றப்பட்டார். இவர்களின் தொகையை இவர், தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இப்போலிக் கிறிஸ்தவர்களின் ஆதரவில் வளர்ந்த ஒல்லாந்த சீர்திருத்த சபையின் அங்கத்தவர் ஒருவர் கூட இன்று, இம்மண்ணில் இல்லாது போய் விட்டனர். இச்சபையின் வெறும் கோயில்களே, வெறும் எச்சங்களாக, பிரித்தானியர் காலத்தில் இங்கு வந்த அமெரிக்க ஆங்கில மிசனரிமார்களால் தங்கள் கோயில் தேவைக்காக பயன்படுத்தும் கட்டிடங்களாக இன்று காணப்படுகின்றன.

(வளரும்)

## நினைவஞ்சலி



வண. பிதா.
அன்ரன் ராஜகாரியர்

சீவியத்தில் உம்மை
நேசித்தோம்.
மரணத்திலும் உம்மை
மறவோம்.

ஜெசா தம்பிநாயகம்
புளொக் L-9
1ஆம் மாடி
அரசாங்க மாடிக்கட்டிடம்
கொழும்பு-4

A/15/97

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வில்லியம் கந்தசாமி
[ஆசிரியர்]

| | |
|---|---|
| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| 22.10.1931 | 27.03.1996 |

நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும். முடிவில்லாத ஒளி இவர்மேல் ஒளிர்வதாக.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (15.03.1997) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளை, மைத்துனர்.
43 / சென் மேரீஸ்2ம் ஒழுங்கை
கொழும்புத்துறை.

A/18/97

# இக்கட்டான..

ஆரம்பித்து வைக்கப்பட்ட போதே யாழ் ஆயர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 62 பயிற்சியாளர்கள், ஆசிரியர்கள், குருக்கள் மத்தியில் தொடர்ந்தும் உரையாற்றிய ஆயர் ''நெருக்கடிகள் இடையூறுகள் இருந்த போதும் பங்குத் தந்தையர்கள் பலர் இப் பயிற்சியின் தேவையையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து இயக்குனர் மூலமாக கேட்டுக் கொண்டதினால் இக் குறுகிய பயிற்சியை நடாத்த முன் வந்தோம். பயிற்சியாளர்கள் மகிழ்ச்சியாகவும் ஆர்வமாகவும் வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது'' என்றார்.

தகவல் – அபிர்ராஜன்

## எம்கருத்து

# எமது துன்பங்கள் வெறுமையானவை அல்ல

பாடுகள் — மரணம் — உயிர்ப்பு இயேசுவின் பாஸ்கா அனுபவமாகும்.

பாடுகள் — மரணம் — கல்லறை அடக்கம் என்பவற்றோடு இயேசுவின் கதை முடிந்து விடும் என்றுதான் யூதர்கள் நம்பினார்கள். அது அடக்கமல்ல தொடக்கம். முடிவுஅல்ல ஆரம்பம். அழிவு அல்ல அத்திவாரம் என அவர்கள் அறியவில்லை.

பாடுகள் — மரணம் வழியாக இயேசு உயிர்ப்பு உத்தானம் என்னும் நிலைகளை அடைந்தார்.

''கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே'' (1 கொரி 15: 17)

உயிர்ப்பிலே தான் அனைத்தும் கட்டி எழுப்பப்பட்டன. சாவின் கட்டுக்கள் நொறுங்கின. சத்தியத்தின் ஒளி பரவியது. வையத்துள் வாழ்வு வளம் பெற்றது.

பாஸ்கா ஒரு ''முடிந்த'' அனுபவமல்ல. ''முடிவில்லாத'' அனுபவம்.

பாடுகள் இல்லை என்றால் உயிர்ப்பு இல்லை. உயிர்ப்புஇல்லை என்றால் பாடுகளில் அர்த்தம் இல்லை. இரண்டும் ஒன்றோடு இணைந்து ஒன்றை ஒன்று நிறைவு செய்கின்றன. ஒன்று இல்லை என்றால் மற்றது அர்த்த மற்றதாகி விடுகிறது.

நாம் மிக நீண்ட காலமாக பயந்த, பாதுகாப்பற்ற, நிரந்தரமற்ற, நிம்மதியற்ற, துன்ப, துயரங்கள் நிறைந்த வாழ்வையே வாழ்கிறோம். இழப்புக்களையும், இடம் பெயர்வுகளையும், இறப்புக்களையுமே எமது அனுபவங்களாக்கியுள்ளோம், எலும்புக்கூடுகளையும் மண்டை ஓடுகளையும் தான் எமது ஏறக்குறைய நாற்பது ஆண்டுகால சரித்திர சொத்துக்களாக சேர்த்து வைத்திருக்கிறோம்.

எங்களின் இந்த நிலைபோன்ற இன்னும் பலரின் நிலையையே திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் 1997ஆம் ஆண்டுக்கான தவக்காலச் செய்தியில் படம் பிடித்துக் காட்டுகிறார். தங்குமிடமற்றவர்கள், போரினால் பாதிகப்பட்டோர், இடம் பெயர்ந்தோர், இயற்கை அனர்த்தங்களால் அல்லலுறுவோர் பொருளாதாரக் காரணங்களுக்காக பெயர்த்தெடுக்கப்பட்டோர் எல்லோரையும் நாம் நினைக்கிறோம். செபிக்கிறோம் என்று ஆறுதல் தருகிறார்.

நாம் வாழுங்கால சரித்திரத்தில் இவை எல்லாம் பெரும் தோல்விகளே. எமது கண்களில் தான் இவை தோல்விகள்.

கடவுளுக்குத் துன்பத்தின் பெறுமதி தெரியும். திறந்த புண்ணில் இருந்து எப்போதும் இரத்தம் ஓட விடமாட்டார்.

எமது துன்பங்களும் துயரங்களும் வேதனைகளும் ''வெறுமையானவை'' அல்ல. அவை ''முழுமையானவை'' ஆக மாற்றம் பெறும்.

ஆண்டவரின் பாஸ்கா அனுபவம் முடிவில்லாத அனுபவமாக எம்மில் தொடர்கிறது. இயேசுவும் எம்மோடு துன்பப்படுகிறார். எமது துன்பத்தில் துணிவும் பலமும் தருவதற்காக. இயேசு பாடுகள்—மரணம் வழியாக உயிர்ப்பும் —உத்தானமும் அடைந்தார். நாமும் எமது பாடுகள் வழியாக உயிர்ப்பு அடைவோம்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு இதையே எமக்கு அழுத்திச் சொல்கிறது. இந்த எண்ணங்களுடனேதான் நாம் 1997 ம் ஆண்டுக்கான ஈஸ்ரர் வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவிக்கின்றோம்—

'' ஆண்டவர் யேசுவை உயிர்த்தெழச் செய்த கடவுளே எங்களையும் அவரோடு உயித்தெழச் செய்து அவர் திருமுன் நிறுத்துவார். (2 கொரி. 4 : 14)

## இடம் பெயர்...

தான் அவர்களுக்கு உணவும் நீரும் பாதுகாப்பும் கொடுத்து வந்தார். கடவுளில் முழுமையாக நம்பி இருக்கும் நிலை தான் அவர்களின் விடுதலைப் பயண அனுபவமாயிருந்தது.

தவக்காலம் எமக்கும் தனிப்பட்ட மனமாற்றம், பாதுகாப்பின்மை, வறுமை, சகோதர சகோதரிகளின் தேவைகளில் கடவுளைக் காணுதல் என்ற அனுபவங்கள் மூலம் அதே விடுதலை நோக்கிய ஞானப் பயணத்தை மீள அனுபவிக்க உதவ வேண்டும்.

யூபிலித் தயாரிப்பின் முதல் ஆண்டான 97 ஆம் ஆண்டு தவக்காலத்தில் வீடற்றவர்களின் துன்பமிக்க நிலையை பற்றிச் சிந்திக்கிறேன்.

வீடு என்பது குடும்ப ஒற்றுமையின் இடம் – இங்குதான் கணவன் மனைவியின் அன்பில் பிள்ளைகள் பிறந்து அடிப்படை ஞான விழுமியங்களுடன் நாளைய குடி மக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் வாழப் பழகுகிறார்கள். இங்குதான் வயோதிபர்களும் வருத்தமுற்றோரும் அன்பையும், நெருக்கத்தையும், ஒத்துழைப்பையும் தமது துன்பத்திலும், உடல் பலவீனத்திலும் அனுபவிக்கிறார்கள்.

இந்த வகையில் தவக்காலம் உலகில் தனிமையாகவும் குழுவாகவும் வாழ்வின் கடின அனுபவங்களுடன் இருப்பவர்களுடன் தொடர்பாகும் காலமாகும்.

## இறைவன்..

இரங்கலுரையில் '' இறைவன் தந்தார். அவரே எடுத்துக் கொண்டார். எமது பங்கில் சிறிது காலமும் இடப்பெயர்வின் போது சில காலமும் அவர் செய்த பணி அவரின் அர்ப்பணத்திற்கு சான்று பகர்கிறது. இவர் பணி தொடர பணியாற்ற இன்னும் பலர் தேவை. பணியாற்ற வாருங்கள்'' என்று அழைப்பு விடுத்தார்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜி. எம். செபஸ்தி

---

## ஏப்பிரல் 1ஆம் நாள்

இது ஏப்பிறல் 1 ஏமாற்றுச் செய்தியல்ல.

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருத்த வேலைகள் ஏப்பிரல் 1ஆம் திகதி ஆரம்பமாகின்றன. உதவிகள் செய்ய விரும்புவோர் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயப் புதிய பங்குத் தந்தை அருள் திரு சாள்ஸ் கொலின்சுடன் தொடர்பு கொள்ளவும்.

---

**பாதுகாவலன் இனி மாத இறுதி வாரத்திலேயே வெளிவரும்.**

(ஆ—ர்)

## 1914ஆம் ஆண்டு நாவல் அறிமுகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்த மங்களநாயகம் தம்பையா என்ற கிறிஸ்தவ பெண் எழுத்தாளரால் 1914 இல் எழுதப்பட்ட ஈழத்தின் முதலாவது சமூக நாவல் ''நொறுங்குண்ட இருதயம்'' தென் இந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனின் பேர் ஆர்வத்தாலும், யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் S. சிவலிங்கராஜா (எம்.ஏ) வின் உழைப்பாலும் மறு பதிப்பு செய்யப்பட்டு 22.2.97 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

20 ஆம் நூற்றாண்டு ஆரம்ப கால யாழ்ப்பாணப் பிரதேச கிறிஸ்தவ மிசனறிமாரின் சமயப் பிரச்சாரப் பின்னணியில் எழுதப்பட்ட மேற்படி நாவலின் அறிமுக உரையை பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசனும், ஆய்வுரையை பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியனும், வாழ்த்துரையை பேராசிரியர் அ. சண்முகதாசும் வழங்க பதிப்பாசிரியர் S. சிவலிங்கராஜா ஏற்புரை வழங்கினார்.

## குருத்துவப் பொன் விழா

**அருள்திரு யோண் பிரான்சிஸ் அ.ம.தி**

**50** 18 — 03 — 1997

பொன் விழா நாயகரைப்
பாதுகாவலன் அன்புடன்
வாழ்த்துகிறான்.

## வசாவிளான் பங்கின் முதற்குரு நானே

—அருள்திரு பீற்றர் துரைரட்டினம்

புனித ஆசீர்வாதப்பர் சபைக்காக கண்டி பேராலயத்தில் திருநிலைப் படுத்தப்பட்ட மிருசுவில் கச்சாய் புனித இராயப்பர் பங்கைச் சேர்ந்த முதற் குருவான அருள்திரு, சூசைநாதர் தம் முதற்திருப்பலியை கச்சாயில் நிறைவேற்றியபோது மிருசுவில் பங்குத் தந்தை அருள்திரு. பீற்றர் துரைரட்னம் பேசுகையில் 'வசாவிளான் பங்கின் முதற் குரு நானே. என்னைத் தொடர்ந்து பல குருக்கள் அங்கு தோன்றினார்கள். தேவ அழைத்தல் என்பது இறைவன் தந்த கொடை. இப்பங்கின் முதற் குருவான இவரைத் தொடர்ந்து இன்னும் பல குருக்கள் தோன்ற வேண்டும்'' என்றார். திரு எஸ். வெலிச்சோர், திரு. ஸ்ரனிஸ்லோஸ், அருள்திரு. தி. சூசைநாதர் ஆகியோரும் பேசினர்.

---

33

யாம்பிள்ளை '' துடிப்புள்ள மாணவனாக, அரிய சகோதரனாக, நல்ல பணியாளனாக அவர் சமூகத்திற்கு பல கருத்துக்களைச் சொன்னார். குருத்துவத்திற்கு பெருமை சேர்த்தார்'' என்றார்.

இளைஞர் உருவாக்கல் இயக்கத்தினரால் வெளியிடப்பட்ட ''உப்பு'' என்ற நினைவு மலரை யோசப்பாலா நூல் விமரிசனம் செய்து அறிமுகப்படுத்தினார். சென் சாள்ஸ் அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை சிறப்புப் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

தகவல்: யோண் பற்றிக்

---

**24. 03. 1997**

காலை — குருக்களுக்கான ஞானஒடுக்கம்.

மாலை — திருத்தைலத் திருப்பலி.

## பாதுகாவலன் - புதிய ஆசிரியர்

பாதுகாவலனின் புதிய ஆசிரியராக அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை யாழ் ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் வழிநடத்துதலில் பாதுகாவலன் மேலும் வளர்ச்சியுற வாசகர்களின் சார்பில் அவரை வாழ்த்துகிறேன்.

கடந்த ஆனி முதல் பாதுகாவலனின் வளர்ச்சிக்கு நீங்கள் தந்த ஒத்துழைப்புக்கு எமது நன்றிகள்.

அன்ரன் மத்தாயஸ்

**ஒவ்வொருவரும் அவரவர் முறை வரும்போது உயிர் பெறுவர் (1 கொரி 15 : 23)**

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 என்னும் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1997 ஆம் ஆண்டு பங்குனி 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. P 193